விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை (27.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## அரசியல் சாசனத் திருத்தத்தை நான்கு கட்சிகள் எதிர்க்கின்றன

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியாக விரும்பிய ஒருவர், எத்தனை தடவைகளும் தேர்தலில் போட்டியிட்டு அந்தப் பதவியை வகிக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் இணக்கம் வெளியிட்டுள்ளதாக சில அமைச்சர்கள் வெளியிடும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளு (20 ஆம் பக்கம் பார்க்க)

## செயலிழந்துள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் இரண்டை மீண்டும் செயற்படுத்த முயற்சி


### புதிய ஆணைக்குழுவொன்றும் உதயமாகும்

(கொர்ழும்பு)

செயலிழந்துள்ள இரண்டு சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் இயங்க வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக உயர் மட்டத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையில் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழு என்பன மீண்டும் ஸ்தா (20 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் எதிர்காலம் சிறக்க மனித உரிமை மதிக்கப்பட வேண்டும்



## அமெரிக்கா அட்வைஸ்

(வாஷிங்டன்)

இலங்கையில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டியது இலங்கையின் எதிர்காலத்திற்குச் சிறப்பைத் தரும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் பி.ஜே.க்ரோவ்லி இதனைத் தெரிவித்துள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## எகிப்து துணைத் தூதுவரின் பதவி திடீர்ப் பறிப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் இராணுவ ஆயுதப் படை புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, எகிப்துக்கான துணைத் தூதுவர் பதவியிலிருந்து திடீரென நீக்கப்பட்டுள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில் ஜெனரல் சரத் பொன்சேகா (20 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல்...

கொழும்புப் பாடசாலைகளில் கடந்த வாரம் நடத்தப்பட்ட க.பொ.த. உயர் தரப் பரீட்சை-2010 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்கள் நாளை முதல் உங்கள் வலம்புரியில் தொடர்ந்து வெளிவரும்.

## பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிட சார்க் அமைப்பு நாடுகள் தீர்மானம்

### உள்துறை அமைச்சர்கள் மாநாட்டில் நிறைவேற்றம்

(இஸ்லாமாபாத்)

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவது தொடர்பில் சார்க் நாடுகள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளன.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்று வரும் சார்க் வலய நாடுகளது உள்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் கடத்தல்களைக் கட்டுப்படுத்தப் பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிராந்திய வலய நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது என பாகிஸ்தான் (20 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு தொடர்ந்து செயற்படுவதாக அச்சம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு தொடர்ந்தும் தென்னிலங்கையில் செயற்பட்டு வருவதாகவும் அப் பகுதியிலுள்ள முக்கியஸ்தர்களின் நடமாட்டங்களை அவர்கள் அவதானித்து வருவதாகவும் செய்திச் சேவை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவினருக்கு நிதியுதவி வழங்கி வருகின்றவர்கள் தொடர்பில் இலங்கைப் புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

கிடைக்கப் பெற்ற சந்தேகத்திற்குரிய தகவல்களின் (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முன்னாள் போராளிகள் 26 பேர் நேற்று விடுதலையாகினர்

(கொழும்பு)

வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் புலி உறுப்பினர்களில் 26 பேரை அரசு நேற்று விடுதலை செய்தது.

இவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் புலிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இருந்த குமரன் பத்மநாதனின் சிபார்சின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

குமரன் பத்மநாதன் எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகப் (20 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...


சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER
யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்



செயற்றிறன் அரங்க இயக்கத் தினால் நேற்று நடத்தப்பட்ட கல்வி பொதுத்தர்ாதர உயர்தர பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் செயற்றிறன் அரங்க நிறைவேற்று இயக்குநர் தே.தேவானந் தலைமை உரையாற்றுவதையும் யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் க.திலகநாதன் விரிவுரையாற்றுவதையும் பங்கு பற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையரின் ஆயுட்காலம் 74 வருடங்களாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையரின் ஆயுட்காலம் கடந்த வருடத்தினை விட அதிகரித்துள்ளதாக நிதியமைச்சின் புதிய வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்தவருடம் இலங்கையரின் ஆயுட்காலம் 73 வயதாக இருந்தது. இது இவ்வருடம் 74 வயதாக அதிகரித்துள்ளது.

அதேவேளை இலங்கையரின் எழுத்தறிவு வீதம் கடந்தவருடம் 90 வீதமாகவும் இவ்வருடம் 91 வீதமாகவும் அதிகரித்துள்ளது.

மேலும் பிரசவத்தின்போது மரணமாகும் சிசு மரணங்கள் கடந்த வருடம்ஆயிரம்பேரில்12பேராக இருந்தது.

இவ்வருடம் அந்த தொகை ஆயிரம் பேரில் பத்து பேராக குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரசவத்தின் போது மரணமாகும் தாய்மார் களின் எண்ணிக்கை ஆயிரம் பேரில் 45 பேர் மரணமாவதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புதிய வரிகளுக்கான யோசனைகள் இல்லை

நாடாளுமன்றில் நாளை மறுதினம் சமர்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத்திட்டப் பிரேரணையில் புதிய வரிகள் தொடர்பான யோசனை கள் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. 2011ஆம்வருடத்திற்கானவரவு-செலவுத்திட்டப்பிரேரணைகள் இவ்வருட இறுதியில் சமர்பிக்கப் படவுள்ளது.

அதேவேளை அதற்கு முன்பாக மினி வரவு-செலவுத்திட்டமொன்றினை அரசாங்கம் நாடாளுமன் றில் சமர்பிக்கவுள்ளது.

இதேவேளை 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட யோசனைகள் நவம்பர்மாதம் அர சாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வேலையில்லா பட்டதாரிகள் 30 ஆயிரமாக அதிகரிக்குமாம்!

(கொழும்பு)

2010ஆம் ஆண்டின் முடிவில் தொழில்வாய்பற்ற பட்டதாரிகள் எண்ணிக்கை 30 ஆயிரமாக அதிகரிக்கும் என தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

3 ஆயிரத்து 174 கலைத்துறை பட்டதாரிகள், 400 சுதேச மருத்துவ பட்டதாரிகள் உள்ளிட்ட 30 ஆயிரம் பட்டதாரிகள் தொழில்வாய் பின்றி இருக்கின்றனர்.

2004ஆம் ஆண்டுக்குப் பின்னர்பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை. தொழில் வாய்ப்புகளை பெறுவதற்காக எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க போவதாகவும் தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# கொழும்பு மாநகர சபையின் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கீழ்!

கொழும்பு மாநகர சபையின் அதிகாரங்களை பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் கொண்டு வருவதற்காகவே, கொழும்பு மாநகர சபை கலைக்கப்பட்டதாக நம்பத்தகுந்த தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாநகர சபையின் நகர பொறியியல் திணைக்களத் தை மாத்திரமே நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைக்க முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் மாநகரசபையின்நிதிமற்றும்ஏனைய நிர்வாகப் பிரிவு களையும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் நடை பெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கொழும்பு மாநகர சபையின் பொறியியல் திணைக்களத்தின் பொறியியலாளர்கள்மற்றும் அதிகாரிகளை பாதுகாப்பு செயலாளர்,தனது அலு வலகத்திற்கு அழைத்து எதிர்கால நடவடிக்கைகள் குறித்துகலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர்கோத்தபாயராஜபக்ஷவோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ இது குறித்து தகவல் களையோ உறுதிப் படுத்தல்களையோ வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மீளாய்வுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெறவிருந்த யாழ். மாவட்டத்தில் நடைமுறைப் படுத்துகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பான இரண்டாம் காலாண்டுக்கான மீளாய்வுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுக் கூட்டம்நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)


**ஐங்கரன் திருமண சேவை**

**மணமகன் தேவை**

எங்களிடம் UK Citizen 26 வயது (BSc),32 வயது (B.Com),35 வயது (MSc),Canada Citizen 28 வயது, 32வயது,35வயது, Australia Citizen 27 வயது(BSc) மணமகள்மார் உள்ளனர். நன்கு படித்த அறிவுள்ள மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு :-
T.P.: No : 00447508295863
00447904535905
Fax: 00442086720673 (U.K)

**மணமகள் தேவை**

UK Citizen 36வயது,32 வயது, 28 வயது ,Canada Citizen 34 வயது,31 வயது ,பிரான்ஸ் Citizen 32வயது,சுவிஸ் Citizen 33 வயது,31வயது, America Citizen 37 வயது, Australia Citizen 34 வயது மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு :-
T.P.: No : 00447508295863
00447904535905
Fax: 00442086720673 (U.K) (C-550)

**தவறிவிட்டது**

48,புகையிரத வீதி,கந்தர்மடத்தைச் சேர்ந்த சிவசாமி ஐயர் மங்களேஸ்வர சர்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (730773080V), இரண்டு மோட்டார்சைக்கிள் இன்சூரன்ஸ்,Tax என்பன அடங்கிய பேர்ஸ் அராலி வீதிக்கும் பொன்னாலைக்கும் இடையில் தவறி விட்டது.கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திலோ ,காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலிலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1776)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் சம்பியன் லேனுக்கும் தாவடிச் சந்திக்கும் நடுப் பகுதியில் (நந்தாவில்) 10 1/4 பரப்பு காணி 2 மாடிக் கட்டடத்துடன் (கீழ்த் தளம் 2 கடை, மேல்தளம்வீடு விற்பனைக்குண்டு. முகப்பு K.K.S. வீதிப் பக்கமாக சுமார் 130 அடி அகலம் கொண்டது.
தொடர்பு:- 077 7789739 (1779)

**ஐங்கரன் திருமண சேவை**

**மணமகன் தேவை**

டென்மார்க் Citizen 12.03.1982இல் பிறந்த, உயர்குலம், இலக்கினத்தில் செவ்வாய், ஆயிலிய நட்சத்திரம், Nurse ஆக கடமையாற்றும் மணப்பெண்ணுக்கு தகுந்த பட்டதாரி மணமக னை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு :-
T.P.: No :- 00447508295863
00447904535905
Fax: 00442086720673 (U.K) (C-550)

**காணி விற்பனைக்கு**

மீசாலை வடக்கில் 10 பரப்பும் பெருங்குளம் சந்தியில் 3 பரப்பும் கொண்ட காணிகள் விற்பனைக் குண்டு.
தொடர்பு:
ச.ஞானச்சந்திரன் (கண்ணன்),
மீசாலை வடக்கு, மீசாலை.
(ஆதவன் மில்) (1775)





**மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்**

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

**கங்காதரன் சாஸ்திரி**
**0770790898**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11நாட்களுக்குள் செய்து தரப்படும்.

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்**

121 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்) (1778)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்

**மனோதத்துவ வைத்தியம்**

*(General Psychotheraphy)*

**பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

25.06.2010 முதல் 02.07.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்க ளுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு)(பிறவியில் ஆண்மை யற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன்
392, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (சி-543)

**Midea Electro Mart**

Authorized Dealer for **Abans** Ltd.



**SCANNER**
CANON LIDE 100-6900/=
HP G 2410-9900/=

**PRINTER**
HP 1005 Laserjet-16,500/=
HP deskjet 3920-6500/=

| COMPACQ CQ3014 DESKTOP PC | |
|---|---|
| PROCESSOR | Intel core2 Duo 2.8 Ghz E7400 |
| MEMORY | 2 GB DDR2 |
| HART DISK | 340 GB 3Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writter |
| MONITER | 19" LG LCD |
| UPS | Toyostar 650 VA |
| SPEAKER | 900w |
| MOUSE | Compaq |
| KEYBOARD | Compaq |
| PRICE | 81,900/= |

| PERSONAL PC SYSTEM | INTEL ATOM PC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core2.7GHZ | Intel core2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 main Board | Intel Chipset G31 main Board |
| MEMORY | 1GB DDR-II, 800MHZ | 1GB DDR-II, 800MHZ | 1GB DDR-II, 800MHZ |
| HART DISK | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITER | 16" LCD AOC | 16" LG LCD | 19" LG LCD |
| KEY BOARD | Multimedia ps\2 | Multimedia ps\2 | Multimedia ps\2 |
| MOUSE | Optical USB\Ps2 | Optical USB\Ps2 | Optical USB\Ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Toyostar 650 VA | Toyostar 650 VA | Toyostar 650 VA |
| PRICE | 44,500/= | 49,900/= | 59,900/= |

| LAPTOPS | COMPACQ 610 | PROLING MINI |
|---|---|---|
| PROCESSOR | Intel core 2 Duo 2.2 Ghz E7400 | Atom Intel 1.6Ghz |
| MEMORY | 2 GB DDR2 | 1 GB |
| HART DISK | 500GB HDD | 160 GB |
| DISK DRIVE | DVD Writter | Nill |
| CAMERA | Wab Camera | web Camera |
| MONITOR | 14.6" | 9" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| PRICE | 81,000/= | 49,900/= |

★ **Abans** உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்
★ Computers- Three Years Warranty
★ Fridge, washing machine and TV- Five Years Warranty

No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA, SRI LANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646,
E-mail:midea21@gmail.com







HNB சிங்கிதி

கல்வி அமைச்சு

2010

ஹற்றன் நஷனல் வங்கி
கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்தும்

**அகில இலங்கை பாடசாலைகளுக்கான சித்திர, சிறுகதை, கட்டுரை, தனிப்பாடல், பேச்சு, குறுநாடகப் போட்டிகள்**

**சித்திரம்** (ஆண்டு 1-13)

சித்திரத்திற்கான விடயப்பொருள் - (1) "எனது கிராமம்"
(2) "நான் மிகவும் விரும்பும் தேசியவிழா".
(3) "இயற்கையின் எழில்"

**சிறுகதை** (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

**கட்டுரை** (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

கட்டுரைக்கான விடயப்பொருள் - "தகவல் தொழில் நுட்பமும் சிறுவர்களும்".
சொற்கள் 1000 தொடக்கம் - 1500 வரை.

**தனிப்பாடல்** (ஆண்டு 6-13 சிங்களம்/தமிழ்)

**பேச்சு** (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

பேச்சிற்கான விடயப்பொருள் - "கல்விச் செல்வம் என்றும் அழியாதது."
பேச்சு 4 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

**குறுநாடகம்** (சிங்களம்/தமிழ்)

நாடகம் 10 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் எந்தவொரு ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தனிப் பாடல் / பேச்சு / குறுநாடகப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள்
2010 ஜூலை மாதம் 12ம் திகதிக்கு முன்பும்
சித்திரம்/கட்டுரை/சிறுகதை போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள்
2010 ஜூலை மாதம் 30ம் திகதிக்கு முன்பும்
சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மாவட்ட மட்டத்திலான போட்டிகள் 2010, ஜூலை மாதம் 17ம் திகதி மாவட்ட நிலையங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
பேர்ஜி - 011-2661983. பிரியான் - 011-2661993

அனுசரணை :

HNB




**S.P.N. MOTORS**




உங்களது நன்மதிப்புப் பெற்ற

**Safari Motor Cycle**
**தற்போது விற்பனையில்**

எஸ்.பி.என் மோட்டோர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

உலக போதைப்பொருள் ஒழிப்பு தின நிகழ்வு நேற்று மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரட்ணம் ஆகியோர் மங்கல விளக் கேற்றுவதையும் பிராந்திய சுகாதாரப்பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் வைத்திய கலாநிதி சிவயோகன் ஆகியோர் உரையாற்று வதையும் நிகழ்வில் கலந்து ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாடு தற்போது வெளிப்பட்டுள்ளது

## இலங்கை அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானின் இராணுவத் தளபதியை பணி நீக்கம் செய்ததன் மூலம் அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்கா மற்றும் நேட்டோ படையின் தளபதி ஜெனரல் ஸ்டென்லி மெக்ரிஸ்டாலை அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா பணி நீக்கம் செய்துள்ளார்.

எனினும் இலங்கையின் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிரான வழக்கு விசாரணைகளின் போது அமெரிக்கா வெளியிட்ட கருத்துக்கள் முற்றிலும் மாறானவை என இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தை விமர்ச்சிக்கும் வகையில் கட்டுரை ஒன்றை வெளியிட்ட காரணத்திற்காக குறித்த இராணுவத் தளபதியை ஜனாதிபதி பணி நீக்கம் செய்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கு அடிக்கடி அறிவுரை வழங்கி வந்த அமெரிக்கா தமது நாட்டு இராணுவத் தளபதி தொடர்பில் மாறுபட்ட நிலைப் பாட்டை கொண்டிருப்பதாக தேசிய பாதுகாப் பிற்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல குறிப்பிட்டுள்ளார். (6)

# இருவெவ்வேறிடங்களில் நடந்த விபத்தில் இருவர் படுகாயம்


இரு வெவ்வேறிடங்களில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்து சம்பவங்களில் படுகாயமடைந்த இருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த சமயத்தில் தும்பளை மாதா கோவில் பகுதியில் மோட் டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து தலையிலும் உடலிலும் படுகாயமடைந்த நிலை யில் பருத்தித்துறை முனையைச் சேர்ந்த குணசீலன் செல்வமனோகரி வயது (46) என்ற பெண்மணி சிகிச்சை பெற்று வருகின்றார். கடந்த வியாழக்கிழமை காலை 11 மணியளவில் தும்பளை நெல்லண்டை பகுதியில் நடந்த மற்றொரு சம்பவத்தில் வீதியால் நடந்து சென்ற வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சிறுவனை மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குணாளமேகன் பிரசாந் வயது (12) என்ற சிறுவனே தலையில் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக மந்திகை ஆதாரவைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-24)

# விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் புதிதாக இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாக இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கண்டி மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட வேளையில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இராணுவ முகாம்களை அமைப்பதற்கான இடங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்ட படையினர் தற்போது அபிவிருத்திப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (6)

# குடிவரவினை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

## பிரித்தானியாவின் புதிய அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

குடிவரவினை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரித்தானியாவின் புதிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

குடியேற்றக்காரர்களின் வருகையினால் பிரித்தானிய சனத்தொகை சடுதியாக உயர்வடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் குடியேற்றத்தை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குடிவரவு அமைச்சர் டேமியன் கிரீன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொழில் விசாக்களை கட்டுப்படுத்தல், திருமண சட்டங்களை கடுமையாக்குதல், மாணவர் விசா வழங்குவதில் சட்ட திருத்தங்களை அறிமுகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரித்தானியாவில் நிலவிய குடிவரவு நிலைமையை மீளவும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மொத்த சனத்தொகை 2.7 மில்லியன் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# அரசியல் அந்தஸ்து கோரி நிற்கும் 500 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள்

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட சிறார்கள் அரசியல் அந்தஸ்து கோருபவர்களாக வகைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் அவுஸ்திரேலியாவின் பல முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3 வருட காலப்பகுதியினுள் இந்த தொகை 25 மடங்காக அதிகரித்துள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையபுள்ளி விபரங்களுக்கு அமைய ஜூன் 11 ஆம் திகதி வரையில் 18 வயதுக்கு குறைந்த 508 சிறார்கள் தனியான முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களுடன் ஈராக் மற்றும் ஈரான் நாடுகளை சேர்ந்தவர்களும் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி சிறார்கள் வீடுகள், விடுதிகள், உணவகங்கள் அல்லது மாற்று வசதிகள் கொண்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பாடசாலை கல்வியும் வழங்கப் படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அவுஸ்திரேலியாவின் கூட்டு அரசாங்கம் ஆட்சி செய்த காலப் பகுதியினுள் 21 சிறார்கள் மட்டுமே அந்த வகைப்படுத்தலில் இருந்ததாக எதிர்க்கட்சி குடிவரவுத்துறையின் பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

ஆனால் புதிய அரசின் நிர்வாகத்தின் கீழ் இந்த தொகை 25 மடங்காக உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (6)

# ஒரு தொகுதி மக்கள் நாளை மீள்குடியேற்றம்

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்தில் உறவினர்களது வீடுகளில் தங்கியிருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்கள் நாளை மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஸ்ரீ ரங்கன் தெரிவித்தார்.

உறவினர்களது வீடுகளில் வாழும் 195 குடும்பங்களைச் சேர்ந்த 556 பேரே இவ்வாறு மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

முல்லைத்தீவு கரைத்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 19 கிராம சேவகர் பிரிவுகளில் இவர்கள் மீள்குடியமர்த்தப் படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (6)

# ஆக்கத்திறன் கண்காட்சி

வல்வை சிவகுரு வித்தியாசாலையில் மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட கண்காட்சி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளர் ரோ. கருணேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6)

# வட்டக்கச்சியில் யானைகளின் தொல்லை

(வேலணை)

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேசத்திலுள்ள இராமநாதபுரம் , கல்மடுநகர் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை தலை தூக்கியுள்ளது. இவ் யானைகளின் தொல்லைகளால் போரின் பின் எஞ்சியுள்ள பயன் தரும் மரங்கள் அழிக்கப்படுகின்றன.

சுமார் 10 வருடங்களின் பின்பு இக்கிராமங்களில் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக இப்பகுதியில் தற்போது மீளக்குடியேறிய மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (6-22)

# குரங்குத் தொல்லையால் பயிர்செய்கை பாதிப்பு

(பருத்தித்துறை)

வரணிப் பகுதியில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள மக்களின் சிறு தானிய வகைகள் , தோட்டச் செய்கை உற்பத்திகள் மற்றும் முருங்கைப் பூ என்பனவற்றையும் அழித்து விடுவதோடு ஆட்கள் இல்லாத சமயம் குரங்குகள் வீடுகளுக்குள் புகுந்து சமைத்த உணவுகளுக்கு தமது கைவரிசைகளை காட்டிவிட்டுச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (6-10)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தரம் 10,11 மாணவர்களுக்கான "சுவாமி விவேகானந்தரின் நல்வழிச் சிந்தனைகள்" பற்றிய கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரை யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கா. குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்கவுள்ளார். (6)

# தபாலகங்களுக்கு நிரந்தர கட்டடங்கள் அமைத்துத் தருமாறு கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சியில் மூன்று தபாலகங்கள் பல வருடங்களாக நிரந்தர கட்டட வசதிகள் இல்லாமல் தற்காலிக கட்டடங்களில் இயங்கி வருகிறது.

காலத்திற்குக் காலம் நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலையினால் தபாலகங்கள் அங்கும் இங்குமாக மாறுவதை காணக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக பருத்தித்துறை தபாலகம் வல்வெட்டித்துறை தபாலகம் கரவெட்டி தபாலகம் மற்றும் சில உபதபாலகங்களும் பல வருடங்களாக தற்காலிக கட்டடங்களிலேயே இயங்கி வருகிறது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி தபாலகங்களுக்கு நிரந்தர கட்டடங்களை அமைக்க துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-10)

# உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வேலணை பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட ஆறு கொத்தணிகளுக்குமான திட்டங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பிரதேச சபையின் உப அலுவலகங்களில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

எனவே இதனை மக்கள் பார்வையிட்டு இது தொடர்பிலான தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராசா கேட்டுக் கொண்டுள்ளார். (6)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் முதன்மை நிலை ஒன்று இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபரும் யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருமான வே. ஞானகாந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன் பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (6)

# இராசி பலன்

*27.06.2010*
*(ஆனி 13, ஞாயிற்றுக்கிழமை)*
*பிரதமை மாலை 6.31 மணிவரை*
*பூராடம் பின்னிரவு 12.29 மணிவரை*
*இராகுகாலம் 4.25-5.55 மணிவரை*
*சுபநேரம் 8.55-10.25 மணிவரை*
*ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கொடியேற்றம். சித்தாமிர்தம்.*

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, செய்தொழில் விருத்தி, சகோதரர் உதவி, கட்டுப்பாடு. |
| இடபம் | எதிர்பாராத பகை, எடுத்த காரியம் தாமதமாகும், பணக் குறைவு, போசனசுகம். |
| மிதுனம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி கைகூடும், தனவருவாய், விருந்துபசாரம். |
| கடகம் | ஆரோக்கியமான நிலை, மனமகிழ்ச்சி,தெய்வசிந்தை, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | மனச் சஞ்சலம், ரோகநிலை, எடுத்தகாரியம், தாமதமாகும், தொழில் முன்னேற்றம். |
| கன்னி | வாகன சுகம், தெய்வசிந்தை, சுபசெலவு, உறவினர் சந்திப்பு. |
| துலாம் | காரிய நன்மை, சுவாரஸ்யம், அந்நியர் சந்திப்பு, தெய்வசிந்தை. |
| விருச்சிகம் | உணர்ச்சி வசப்படல், அதிக செலவு, ஆரோக்கியக் குறைவு, அதிக பிரயாசை. |
| தனுசு | சிந்தனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| மகரம் | உற்சாகம், பிரயாணம், தெய்வ சிந்தை, முயற்சி தாமதம். |
| கும்பம் | பெரியோர் உதவி, எடுத்தகாரியம் கைகூடும், தெய்வதரிசனம், பொருள் சேர்க்கை |
| மீனம் | தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், தன்னம்பிக்கை, பிறர் உதவி. |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## புதிர் போடலாமா?

"சேர், நீங்க அறிவாளியா?, முட்டாளா?"

"அறிவாளி என்று தான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் என் வீட்டுக்காரியைக் கேட்டால் வேறு விதமாகச் சொல்லுவா.உங்களுக்கு ஏன் திடீரென்று இந்தச் சந்தேகம்?"

"நீங்க அறிவாளியாக இருந்தால் உங்களிடம் ஒரு புதிர் போடலாம் என்று நினைத்தேன்"

"போடுங்களேன்"

"ஒரு நதிக்கரை.இந்தப்பக்கத்தில் மூன்று பேர் நின்று கொண்டிருக்கிறார்கள்.அடுத்த கரையில் ஒரு பீரங்கி வெடித்தது.இந்தக்கரையில் இருந்த மூன்று பேரில் ஒருத்தன் புகையைப் பார்த்தான்.இரண்டாவது ஆள் தன் காலுக்குக் கீழே தண்ணியைத் துளைத்துக் கொண்டு போனதைப் பார்த்தான்.மூன்றாவது ஆள் சத்தத்தைக் கேட்டான். அப்படியானால் குண்டு வெடித்ததை முதலில் தெரிந்து கொண்டவன் யார்? இரண்டாவதாகத் தெரிந்து கொண்டவன் யார்? மூன்றாவதாகத் தெரிந்து கொண்டவன் யார்?

"நான் அறிவாளி இல்லையென்று வேண்டுமானால் ஒத்துக் கொள்கிறேன்.அதற்காக இப்படியெல்லாம் கேட்டு என்னைக் குழப்பாதீர்கள் சேர்"

"சரி, நானே அதற்கு விடை சொல்லட்டுமா?"

"இப்ப சொன்னீங்களே... அதுமுறை சொல்லுங்க"

"முதல் ஆள் புகையைப் பார்த்தானே அவனுக்குத் தான் முதலில் தெரியும்.இரண்டாவது ஆள் தண்ணீரில் குண்டு துளைத்துக் கொண்டு போனதைப் பார்த்தானே அவன் தான் கடைசியாகத் தெரிந்து கொண்டவன்.சத்தத்தைக் கேட்டவன் இருக்கிறான் பாருங்க அவன் தான் இரண்டாவதாக தெரிந்து கொண்டவன்.ஏனெனில் வெடிகுண்டு போகும் வேகத்தை விட சத்தம் போற வேகம் அதிகம்"

"எப்படியோ... எனக்கு பதில் தெரியாத ஒரு கேள்வியைக் கேட்டு என்னை முட்டாள் என்று நிரூபித்து விட்டீர்கள்.சரி, இப்ப நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா?

"கேளுங்களேன்"

"முட்டாள்களிடம் என்ன கேட்டாலும் 'தெரியாது' தெரியாது -என்று பதில் சொல்லுவார்களாமே... உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 150 |
| தக்காளி | 120 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | -- | 110 | 90 |
| கரட் | 200 | 200 | 190 |
| பூசனி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 75 |
| பாகற்காய் | 180 | 160 | 110 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 60 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 |
| லீக்ஸ் | 200 | -- | 150 |
| பீற்றூட் | 100 | 110 | 110 |
| கறிமிளகாய் | 140 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 350 |
| போஞ்சி | -- | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | -- | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 25 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 |

# 'ஈழம்' என்று நான் சொல்வதில்லை பேராசிரியர் சிவத்தம்பி செவ்வி

இலங்கையின் மூத்த தமிழறிஞர் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் வருகையை எதிர் பார்த்து வருக சிவத்தம்பி... உருகுதே என் இதயம்! எனக் காத்திருந்தார் முதல்வர்.

கருணாநிதியின் காத்திருப்பு வீண் போகவில்லை. வந்திருக்கிறார் சிவத்தம்பி!

**ஆங்கிலத்தின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில் தமிழ் எந்த நிலையில் இருப்பதாக நினைக்கிறீர்கள்?**

கருணாநிதியுடன் சிவத்தம்பி...



இந்தியா , ஆங்கிலேயர்களின் காலனியாக இருந்தது. ஆகவே ஆங்கிலத்தை நம்மால் தவிர்க்க இயலாது. இருந்தாலும் தமிழ் , தமிழர் என்ற உணர்வு இருக்கும் வரை, எந்த மொழியாலும் தமிழை அழிக்க முடியாது. உலகின் முக்கிய மொழிகளான ஸ்பானிஷ், அரபிக்,பிரெஞ்ச், ஆங்கிலம் போன்ற மொழிகளில் தமிழைப் பற்றிய நூல்களை எழுதினால், தமிழின் பெருமையை உலகுக்கு இன்னும் வலுவாக எடுத்துக் கூற முடியும். அதற்காக ஆங்கிலப் பரீட்சயமும் வேண்டும் தான். தமிழ் அல்ல முக்கியம்; தமிழராக வாழ்வது தான் முக்கியம்!

அமெரிக்கா, ஜெர்மனியில் இருக்கும் நமது பிள்ளைகள் தாங்கள் கறுப்பர்கள் அல்ல என்பதை உணர்த்த, தமிழ் படிக்கிறார்கள். ஆனால், அங்கே இருக்கும் இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் பலருக்கு தமிழ் தெரியாது.

தமிழை எல்லா வகையில் வளர்த்தாலும் கூட நமக்கு தமிழை வளர்க்க ஓர் ஆய்வுக் கூடம் இருக்கிறதா? கடந்த 100 ஆண்டுகளில் தமிழ் நாட்டுச் சூழலில் நாம் என்ன கண்டுபிடித்து இருக்கிறோம் சொல்லுங்கள்? தமிழகத்து அறிஞர்கள் வெளிநாடுகளில் அல்லவா கண்டுபிடிக்கிறார்கள்?

**நீங்கள் எங்களை ஈழத் தமிழர் என்று சொல்லக் கூடாது. இலங்கைத் தமிழர் என்று சொல்ல வேண்டும் என்று சொல்லி இருக்கிறீர்களே?**

ஈழம் என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட விடயம். என் அபிப் பிராயப்படி ஈழம் என்பது சிங்களச் சொல்லில் இருந்து வந்ததாக நினைக்கிறேன். துரதிஷ்டவசமாக இன்றைக்கு ஈழம் என்ற சொல் இலங்கையில் வேறு சில கருத்துகளை ஏற்படுத்துகின்றன. அங்கு உள்ள இளைஞர் அமைப்புகள் , ஈழம் என்ற பெயரைப் பயன்படுத்திச் செய்யும் அரசியல் போராட்டங்கள் தவறான கருத்துக் களை ஏற்படுத்திவிட்டன. அதில் இருந்து விடுபடவே இலங்கை என்று சொல்கிறோம்.

அதனால் தான் ஈழம் என்று நான் பயன்படுத்துவது இல்லை. அதே நேரத்தில் அந்தச் சொல்லுக்கு நான் எதிரியும் இல்லை. இந்தியாவில் நீங்கள் எப்படித் தமிழர்களாக, இந்தியர்களாக இருக்கிறீர்களோ... அது போல நாங்களும் இலங்கையர்களாகவும் தமிழர்களாகவும் இருக்கிறோம். தமிழகத்தில் இருக்கும் நீங்கள், லண்டன் செல்கிறீர்கள். அங்கே யாராவது கேட்டால் இந்தியன் என்று தானே சொல்வீர்கள்.

அதுபோல இலங்கையில் இருக்கும் எங்களுக்கான உரிமையை நாங்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.




**முள்வேலி முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் தமிழர்களின் நிலை எப்படி? அந்த மக்கள் இந்தச் செம்மொழி மாநாட்டை எப்படிப் பார்க்கிறார்கள்?**

அரசியல் விவகாரம் சம்பந்தமாக எதுவும் நாம் பேச வேண்டாம். இலங்கையில் உள்ள உள்நாட்டு விடயங்களை இன்னொரு நாட்டில் வந்து நான் பேசத் தயாராக இல்லை. அது பிழை என்று நினைக்கிறேன் .

**மாநாட்டுக்கு உங்களை வற்புறுத்தி அழைத்ததாக ஒரு பேச்சு இருக்கிறதே?**

எந்தவிதமான வற்புறுத்தலும் இல்லை. நானாகவே வந்திருக்கிறேன். தமிழாசிரியன், ஆராய்ச்சியாளன் என்ற முறையில் வந்துள்ளேன். கூடவே , ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளேன்! என்றார்.

# காப்பாற்றுமா கோவை மாநாடு? கரையும் தமிழ் பிம்பம்....

பேசும் மொழியை வெறும் கருவியாக மட்டும் பார்க்காமல்,உயிராய் உணரக்கூடியது தமிழ் இனம். கோவையில் 5 நாட்களாக நடக்கும் உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு அந்த உணர்வை உலகுக்குச் சொல்லும் நோக்கத்தின் ஒரு கட்டமாகத்தான் நடக்கிறது.

குடியரசுத் தலைவர் ஆரம்பித்து வைத்த மாநாட்டு நிகழ்வுகள் அடுத்தடுத்து சிறப்பாக நடந்த வண்ணம் இருந்தாலும் ஒரே ஒரு கவலை முதல்வர் கருணாநிதி தொடங்கி யாழ்ப்பாணத்துப் பேராசிரியர் கா.சிவத்தம்பி வரை அனைவருடைய மனதிலும் நிலை கொண்டிருந்தது,

**கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே வாளோடு மூன் தோன்றிய மூத்த குடி** என்று தமிழ்ப்பெருமை பேசப்பட்டதை உலக மொழியியல் அறிஞர்களில் முக்கியமானவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால் சமீபகாலத்தில் ஐரோப்பிய நாடுகளில் கிளம்பியிருக்கும் ஆய்வாளர்கள்,அதற்கு எதிர்க்கருத்தை வைக்க ஆரம்பித்திருப்பது தான் மாநாட்டின் கவலைக்குக் காரணம்.

தமிழுக்குச் செம்மொழி மரியாதை கிடைத்திருக்கும் இந்த நேரத்தில் தான்,இது மாதிரியான பின்னடைவுகளும்! கோவை மாநாட்டு ஆய்வு அரங்கங்களில் இந்தக் கவலைகள் அதிகமாகப் பரிமாறப்பட்டன. உலகில் இருந்த ஆறு நாகரிகங்களில் நான்கு நாகரி கங்கள் இன்று அடையாளம் இல்லாமல் போய்விட்டன. சீன மற்றும் இந்திய நாகரிகங்கள் தான் இன்று வரை இருக்கின்றன.

சீன நாகரிக மக்களின் மொழி சீன மொழி. இந்திய நாகரிகத்தின் அடையாளமாக சமஸ்கிருதமும் தமிழும் இருக்கின்றன. அதிலும் சமஸ்கிருதம் மக்கள் பேசும் மொழியாக இல்லை. தமிழ் மட்டுமே இன்னும் வழக்கு மொழியாக இருக்கிறது. இந்த இரண்டு மொழிகளுக்கும் எந்தப் பகைமையும் இல்லை.

2004ஆம் ஆண்டு தமிழ் செம்மொழியானது. அடுத்த ஆண்டே சமஸ்கிருதமும் அந்தத் தகுதி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. எனவே இரண்டு மொழிக்கும் இருந்த பகைமை முடிந்தது என்றே நாம் மகிழ்ந்தோம். ஆனால் தமிழுக்குப் பகையான கருத்துக்கள் இப்போது எதிர்பாராத திசையாக ஐரோப்பாவில் இருந்து வர ஆரம்பித்துள்ளது.

**சங்க இலக்கியங்களில் சொல்லப்படும் மன்னர்களின் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பாத்திரங்கள்; 9ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு தான் தமிழ் இலக்கியங்களே வந்தன** என்று ஓர் ஐரோப்பிய ஆய்வாளர் எழுதியிருக்கிறார். இன்னொரு அறிஞர் , **வடமொழியில் இருந்து தான் இந்திய மொழிகள் அனைத்தும் வந்தன** என்று பெரிய புத்தகம் போட்டு ,தமிழின் மாண்பை பின்னுக்கு தள்ளப்பார்க்கிறார். ஐரோப்பாவில் ,அமெரிக் காவில் வடமொழி ஆதரவாளர்கள் அதிக மாகி விட்டதை தமிழர்கள் தங்கள் ஆய்வின் மூலம் தடுத்தாக வேண்டும் ! என்று முனைவர் வா. செ.குழந்தைசாமி கூறியதை மாநாட்டு ஆய்வரங்க மேடையில் இருந்த முதல்வரும் , ஆய்வரங்கில் இருந்த அறிஞர்களும் உன்னிப்பாக கவனித்தனர்.

**தமிழ்மொழி, பிறப்பின் போதே செம்மொழி தான். அதனை இந்திய அரசாங்கத்தின் மூலம் இந்திய அரசாங்கத்தின் மூலம் சொல்ல வைத்தவர் கலைஞர். அது ஒரு வகையில் வெற்றி தான். ஆனால் அந்த வெற்றியை நிலையாக ருசிக்க விடுவார்களா?** என்ற சந்தேகக் கேள்வியை போட்ட அமைச்சர் அன்பழகன்,பரிதிமார்ச்கலைஞரால் தொடங்கப்பட்ட போராட்டம் ,கலைஞரால் முடித்து வைக்கப்பட்டது. நம்மொழியின் பாரம்பரியத்தை நாமெல்லாம் சேர்த்து **நிலைநாட்டியாக வேண்டும் !** என்று உத்தர விட்டார். இந்தக் கருத்துக்களை நிலைநாட்ட தேவையான ஆதாரங்களையே முதல்வர் கருணாநிதியும் தனது பேச்சில் அடுக்கினார். வெளிநாட்டிலிருந்து வந்திருந்த மொழி யியல் அறிஞர்கள் அனைவரும் ஓரளவுக் குத் தமிழைப் புரிந்துகொள்பவர்களாக இருந்த

ஆய்வரங்க தொடக்க விழாவில்...



தால், முதல்வரின் கருத்துக்களுக்கு கைதட்டல் எதிரொலித்தது.

**இந்தோ –ஆரிய மொழி குடும்பத்திற்கும், தமிழுக்கும் தொடர்பு இல்லை; திராவிட மொழிக் குடும்பத்தில் முதன்மையானது தமிழ் என்ற எல்லிஸ், கால்டுவெல் ஆகிய இருவரும் சொன்னார்கள். சிந்து சமவெளி நாகரிகம் தான் திராவிட நாகரிகம் என்று கண்டுபிடிக்கப் பட்டபோது தமிழின் தொன்மை எல்லோருக் கும் புரிந்தது. இந்திய நாகரிகத்தின் அடையாளமான சேலையும் ,வேட்டியும் திராவிட நாட்டின் கொடை என்ற பேராசிரியர் சட்டர்ஜி சொல்லியிருக்கிறார். மொஹஞ்சதாரோ, ஹரப் பாவில் கண்டறிந்த தாய்த்தெய்வ வழிபாடு, திராவிட வழிபாடு தான்! ஆதிச் சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகள், சிந்து வெளியில் கிடைத்த மண்டையோடுக்ளோடு ஒத்துள்ளன. இதையெல்லாம் நாம் தான் வெளிநாட்டவருக்கு எடுத்துரைத்திட வேண்டும். ஆனால், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத கால்டுவெல், ஆல்பர்ட் சுவைட்சர் போன்ற வெளிநாட்டவர்கள் தமிழின் அருமையை சொல்லும் நிலைதான் தொடர்ந்து நடந்து வருகிறது...** என்று சொன்ன கருணாநிதி,

**இன்னும் தமிழுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று அறிஞர்கள் இந்த அரசுக்கு ஆணையிட வேண்டும்!** என்று அன்போடு கேட்டுக்கொண்டார். உலக அளவில் தமிழ் பிம்பம் கரைந்துகொண்டிருப்பது குறித்து, கருணாநிதி ஆழ்ந்து கவலைப்படுவதையே அவரது வார்த்தைகள் உணர்த்தின.

ஐந்து நாள் மாநாட்டு ஆய்வரங்கங் களில் படிக்கப்படும் கட்டுரைத் தலைப்புகள் 80 சதவிகிதம் நிகழ்காலத்திற்குப் பொருத்தமில்லாத, எம்.ஃபில்., பி.ஹெச்டி. பட்ட ஆய்வேடுகளைப் போலவே இருந்தாலும் ஒரு சில தலைப்புகள் தமிழ் வரலாறு தோற்றத்தை ஆராய்வதாக இருந்தன. சிந்துவெளி பண்பாடுகளும்... எழுத்துக்களும்... திராவிடத் தொடர்புகளும் என்ற தலைப்பில் இரண்டு மூன்று அமர்வுகள் அடுத்தடுத்து நடக்கஇருக்கின்றன. மேலும், உலக அளவில் முக்கியமாகக் கருதப்படும் ஜார்ஜ் ஹார்ட், அஸ்கோ பர்ப்போலோ போன்ற அறிஞர்களும் தங்களின் ஆய்வுகளாக என்ன அறிவிக்கப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்தே மாநாட்டின் நோக்கம் எத்தனை தூரம் நிறைவேறியது என்பது புலப்படும்.

கோவை மாநாடு, தமிழ்ப் பெருமையை வரலாற்றை உலகம் ஒப்புக்கொள்ளத்தக்க ஆதாரத்துடன் சொல்லியாக வேண்டிய நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறது. நாம் நம்முடைய ஓட்டத்தை ஆரம்பித்து இருக்கிறோம்.

தமிழ் சமுதாயம் பற்றிய ஆய்வுக ளைச் சிதைந்து போகாமல், திசைமாறிவிடா மல் நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு கலைஞருக்குத்தான் இருக்கிறது! என்று தழுதழுத்த குரலில் கா.சிவத்தம்பி சொன்னார்.

விடாப்பிடியாகப் போராடிய இந்த இலங்கைத் தமிழ் அறிஞரை இந்த மாநாட்டுக்கு வரவழைத்த கருணாநிதிக்கு அவர் சொன்னதைச் செய்தாக வேண்டிய கடமையும் இருக்கிறது.

# தமிழர்களின் அவலத்தை வெளிப்படுத்தும் மூன்று பேரின் முயற்சி... வெளிவரும் அதிர்ச்சி

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைப்பற்றி இதுவரை தமிழ் அமைப்புக்களும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் தான் பேசிக்கொண்டிருந்தனர்.



ஜனாதிபதி

ஆனால், சிங்களவர்கள் மத்தியில் அது தொடர்பாக பேச்சே இல்லை. தற்போது,அந்த இனத்தைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் மூன்று பேர் சேர்ந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

தமிழர்கள் மீது தொடுக்கப்படும்

## தமிழருக்காகக் குரல் கொடுக்கும் சிங்களவர் குறைந்து விட்டனர்

ஒடுக்கு முறை குறித்து அதில் ஏராளமான விவரங்களை தொகுத்து அவர்கள் பட்டியல் இட்டுள்ளனர்.

1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதி ரான இனப்படுகொலை ஏவப்பட்டபோது, அதை அங்கு இருந்த சிங்கள முற்போக்குச் சக்திகள் கண்டித்தனர்.

பேரினவாதம் என்பது சிறுபான்மைத் தமிழர்களுக்கு



வாசுதேவநாணயக்கார

மட்டும் எதிரானது அல்ல.... அது சிங்களவர்களுடைய உரிமைக்கும் உலை வைத்துவிடும் என்று எச்சரித்தனர். நவசமாஜக் கட்சி என்ற இடதுசாரி அமைப்பு வெளிப் படையாகவே தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தது. அந்தக்கட்சியைச்சேர்ந்த வாசு தேவநாணயக்கார, அப்போது தமிழர்களுக்கு ஆதரவாக உரத்து குரல் எழுப்பி வந்தார். சிங்கள இடதுசாரி கட்சிகளும் பேசி வந் தன.சிந்தனைத்தளத்திலும் பலர் ஆதரவைத் தெரிவித்தனர். ராஜபக்ஷ அரசை விமர்சித்து வந்த சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கடந்த ஆண்டு ஜனவரி மாதம் சுட்டுக்கொல்லப் பட்ட பிறகு, கொஞ்சம் கொஞ் சமாக சிங்கள மக்களிடையே இருந்த ஜனநாயகச்சக்திகளின் எண்ணிக்கை குறைந்து போனது.

தமிழர்கள் மீது இவ்வளவு பெரிய கொடுமை நிகழ்த்தப்பட்டும் ஒரு சிங்களவர் கூட அதைக் கண்டித்து பேசுவதற்கு முன் வரவில்லையே என்ற எண்ணம் தமிழர்கள் தரப்பில் இருந்தது. அதற்கு விடை கூறும் விதமாக, இப்போது இந்த அறிக்கை சுனிலா அபயசேகர, ருக்கி பெர்னாண்டோ மற்றும் சுனந்த தேசப்பிரிய ஆகிய மூவர்தான் இவ் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

சுனிலா அபயசேகர மனித உரிமை மீறல்களை பற்றி ஆவணப்படுத்துகிற இன் ஃ பாம் என்ற மையத்தை நடத்தி வருகிறார். ருக்கி பெர்னாண்டோ சட்டம் மற்றும் சமூகம் என்ற அறக்கட்டளையை நடத்தி வருகிறார். சுனந்ததேசப்பிரிய மனித உரிமை ஆர்வலர் பத்திரி கையாளராகவும் பணிபுரிகிறார்.

இலங்கைக்கு அளித்துவந்த வரிச் சலுகையைத் தொடரவேண்டும் என்றால், அந்த நாடு மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்று ஐரோப்பிய யூனியன் நாடுகள் வலியுறுத்தி யுள்ள நிலையில் .... இந்த அறிக்கை இலங்கை அரசுக்கு இக்கட்டை ஏற்படுத்தும். இதில் அவர்கள் திரட்டித்தந்துள்ள புள்ளி விப ரங்கள், எளிதில் புறக்கணிக்க முடியாதவை.

2006ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நடந்த சட்டவிரோதப்படுகொலைகள், உள் ளிட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு வாயைத் திறந்ததே இல்லை. 2006 - 2007 ஆண்டுகளுக்கிடையில் 67 மனித உரிமை ஆர்வலர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2007ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 1,212 சட்டவிரோதப் படுகொலைகள் இலங்கை அரசால் செய்யப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றி ஆதாரங்களோடு இலங்கை அரசு நியமித்த இரண்டு விசாரணை கமிஷன்களின் முன்பும் புகார் தெரிவிக்கப் பட்டது.

ஆனால் அதற்கு எந்தப் பலனும் இல்லை என்கிறது இந்த அறிக்கை யில். இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்த சுயேச்சையான சர்வதேச விசா ரணை நடத்தப்படவேண்டும் என்று உலகளாவிய மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தி வரும் நேரத்தில்.... கண்துடைப்புக்காக இலங்கை அரசு விசாரணைக் கமிசன் ஒன்றை நியமித்திருக்கிறது. ஆனால்,அதை அந்த மனித உரிமை அமைப்புகள் ஏற்றுக்கொள்ள வில்லை. காரணம்,ஏற்கனவே இது போன்ற கமிசன்கள் இலங்கை அதிபர்களால் பலமுறை நியமிக்கப்பட்டன.

ஆனால், அவற்றின் அடிப் படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லை என்று அவை குற்றம்சாட்டி வருகின்றன. இப்போது வெளியான சிங்கள மனித உரிமை ஆர்வலர்களின் அறிக்கை, அது போன்ற கமிசன்களின் வரலாற்றையும் சுட்டிக்காட்டியுள்ளது.


இலங்கையில் நடைபெற்ற 16 மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு என்று இலங்கை அதிபர் 2006 நவம்பர் மாதத்தில் விசாரணை கமிசன் ஒன்றை நியமித்தார். அது 2009 யூன் மாதத்தில் கலைக்கப்பட்டது. அந்த கமிஷன் கொடுத்த அறிக்கை என்ன என்பதுபற்றி இதுவரை எவ ருக்கும் தெரியவில்லை.

நீதிபதி மகாநாமா திலகரத்னே தலைமையில் அதன் பின்னர் ஒரு விசாரணை கமிஷன் நியமிக்கப்பட்டது. அதுவும் அறிக்கையை சமர்ப்பித்துவிட்டது. ஆனால் அந்த அறிக்கையும் இதுவரை பொதுமக்களுக்கு வெளி யிடப்படவில்லை. மனித உரிமைகள் விடயத்தில், இலங்கை அரசு எந்த அளவுக்கு அலட்சியமாக இருக்கிறது என்பதற்கு தேசிய மனித உரிமை ஆணையத்தை அது கையாளுகிற முறையிலேயே தெரிந்துவிடும். அந்த ஆணையத்தின் தலைவராக இருந்தவரின் பதவிக்காலம், கடந்த 2009டிசம்பருடன் முடிவடைந்து விட்டது. புதிதாக அதற்குத் தலைவரோ, கமிஷனர்களோ இதுவரை அரசால் நிய மிக்கப்படவில்லை.

இலங்கையில் தொடர்ந்து வரும் மனித உரிமை மீறல்களை அட்டவணையிட்டுள்ள இந்த அறிக்கை,தமிழர்கள் வாழும் இலங் கையின் வடக்கு மாகாணத்தில் போரின் போது கொல்லப்பட்டவர்களுக்கு வழக்கமாக நடத்தப்படும் மத ரீதி யான சடங்குகளைக்கூட செய்ய விடாமல்,இராணுவத்தினர் தடுத்து வருவதைச் சுட்டிக்காட்டுகிறது. அதுபோலவே, தங்களுடைய நிலைத்தை பலவந்தமாக கடற் படையினர் கையகப்படுத்துவதற்கு அமைதியான முறையில் எதிர்ப்புத்தெரிவித்தார். தமிழர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதையும் இந்த அறிக்கை ஆதாரங்களோடு எடுத்துக் காட்டுகிறது.

கருத்துச் சுதந்திரத்தின் மீது இலங்கை அரசு மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் குறித்தும் இந்த அறிக்கையில் விபரிக்கப்பட் டுள்ளது யுத்தகாலத்தில் கைது செய்யப்பட்ட தமிழ்ப்பத்திரிகை யாளரான திஸ்ஸநாயகத்திற்கு பொதுமன்னிப்பு அளித்துவிட்டதாக ஜனாதிபதி விளம்பரப்படுத்தி வருகிறார். ஆனால் இதுவரை திஸ்ஸநாயகம் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை. சிங் களப்பத் திரிகையாளரான பிரக்கீத் எக்லிகோடா என்பவர் காணாமல் போய் 140 நாட்களுக்கும் மேல் ஆகிவிட்டன. அவர் என்ன ஆனார் என் பதைப்பற்றி அரசும் மௌனம் சாதிக்கிறது.

போரினால் பாதிக்கப்பட்டு மன நிலை சரியின்றி இருக்கும்



சுனந்த தேசப்பிரிய

தமிழர்களுக்கு மருத்துவ ரீதியாக கவுன்சிலிங் போன்ற சிகிச்சைகளை அளிப்பதற்கு தன்னார்வக்குழுக்கள் முயற்சி எடுத்தன. ஆனால் , அவற்றை அரசு அனு மதிக்கவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வட்டப்பாளை என்ற கிராமத்துக்குத் திரும்பவந்து குடியேறிய தமிழர்கள்,தமக்குள் நல உதவி அமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சித்த போது அதையும் அரசு தடுத்து விட்டது.

போரினால் இடம்பெயர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நல உதவிகளை



லசந்த விக்ரமதுங்க

வழங்குவதற்காகச் சென்ற மாணவர் களையும் இராணுவத்தினர் அனுமதிக்க வில்லை. இந்த ஆண்டில் மட்டும் யாழ்ப்பாணப் பகுதியில் கொலை,பலாத்காரம், காணாமல் போகச் செய்தல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக 16 புகார்கள் தெரிவிக்கப்பட்டுள் ளன. கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவரை

**ஜூனியர் விகடன்**

சீரழித்த குற்றத்தின் பேரில் நான்கு இராணுவ வீரர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர். இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதிவரை 17 பேர்களை காணவில்லை என்று தேசிய மனித உரிமை கமிஷனிடம் புகார் தெரி வித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 9000 க்கும் மேற்பட்டவர்கள் வவுனியாப் பகுதியில் இரகசியமாக

13ஆம் பக்கம் பார்க்க...

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### விடியல்

அடிமைச் சந்தையில்
அடிவாங்கும் அநியாயம்!
சீதனச் சீர்கேட்டினுள்
சிக்கிச் சின்னாபின்னம்!
பெண்ணியத்தெதிர்
அநியாயங்கள்—அகல
விடிவு காலம்...?
வெறும் கானல் நீர்
தொடர்கதையே அன்றி
முடிவு காலம்...?
நீயும் புறப்படு பெண்ணே!
அடக்குமுறை பிடுங்கிஎறி!
புது மாதர் உலக காண்!

பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்

### எழுந்திடுவோம்

பூர்வீக மண்ணில் நாம்
அநாதைகள் ஆனோம்
புதிதாய்ப் பிறக்க வழியின்றித்
துடிக்கின்றோம்
எங்கள் கண்ணீரில் ஆனந்தமா?
எழுவோம் மீண்டும்
நம் வாழ்வு சிறக்க...
எங்கே எங்கள்மொழி...
கலாசாரம் என்று கேட்க
எவரும் இல்லையாம்
இளைய தலைமுறையே
எழுந்திடுவீர்
எம் தனித்துவத்தைக் காக்க...

ஆழிவேந்தன்
ஆழியவளை

### முத்தமிடுகிறேன்



மலர்போல எழில் கொண்ட
மதி மயக்கும் மங்கையே
மணவறையில் நாம் ஒன்று சேரும்
மணநாள் வரும் என
மனதில் நினைத்தபடி
மகிழ்ச்சியில் நானிருந்தேன்
மனம் கொண்ட கோலம்
மணவறையை சேராது என
மாற்றார் சொல் கேட்டு
மாற்றிவிட்டாய் உன்முடிவை
மாறாத என் மனமோ
மங்கை உனை நினைத்து
மண்ணோடு மண்ணாக
மடியமனதில் எண்ணி
மண்ணை முத்தமிடுகிறேன்

தி.மேரி டயானா
யாழ்ப்பாணம்.

### இமயம் தொட...

நீ என்பது நீதான்
நிஜமான வாழ்வைத்தேடி
எங்கே ஓடுகிறாய்?
முதலில் நிலையாகு
நீ என்பதைப் புரிந்து கொள்
புரிந்து கொள்வது தான்
வாழ்க்கை!


மாவை. நா.கஜேந்திரா

### அன்புத் தாயே

பத்து மாதம் சுமந்து பெற்றாய்
உதிரத்தால் உயிர் கொடுத்தாய்
உறவுகளில் உன்னதமாய்
உணர்வுகளில் உத்தமியாய்
உன் கண்ணில் எனைச் சுமந்த
உலகமெலாம் வாழ்த்துகின்ற
உன் அன்பு பெரிதல்லோ!

துருவன்

## மௌனத்தின் தேடல் – 25



### கொடுமை

தள்ளாத வயதிலும்
தள்ளுவண்டியுடன்
சுட்டெரிக்கும் வெயிலிலும்
மேலாடை இன்றி- நீ
உழைப்பது
உழைப்பின் பெருமையா—அல்ல
உன் பிள்ளைகள் செய்த
கொடுமை...

இயலவன்
குருநகர்.

### வயிற்றுப்பிழைப்பு

தள்ளாடும் வயதில் — சிறிதும்
தடுமாற்றமின்றி
தள்ளுவண்டியுடன்
தார் றோட்டில் பயணம் செய்வது
வயிற்றுப் பிழைப்புக்காக

த.கேமா
கொக்குவில்

### காலம்

தள்ளாத வயதில்
உச்சி வெயிலில்—நீங்கள்
வண்டி இழுப்பதைப் பார்த்து
இளசுகள் முகத்தை
திருப்பிக் கொள்வது
வெட்கத்திலா?
இல்லை நீங்கள்
உதவி கேட்பீர்கள்
என்ற பயத்திலா?

வி.ஹரிந்துஜா
வடகோவையூர்.

### வறுமை

கொழுத்தும் வெயிலில்
ஏன் இந்தவேலை?
பசியின் கொடுமையா?
அல்லது-உன்
பிள்ளைகளின் வறுமையா?

பொன். இளவரசி
பருத்தித்துறை

### வருந்தாதே

வயதாகி விட்டாலும்
வலிமையுடன் நீ
வண்டியிழுப்பது
வறுமைக்காகவா?
வருந்தாதே!
வயோதிபனே!
வரும் காலம் உனக்கு
வசந்த காலமாகும்

மோ.திவியா
சித்தன்கேணி

### என்னை நீ வாழ்த்திடு

மனிதனாய் நானும்
வாழ்ந்திட நினைத்து
மாடாய் இழுத்து
ஓடாய் தேய்ந்தேன்
நாயாய் நின்று
நாட்டையும் காத்தேன்
கண்ணும் இழந்தேன்
இனி என் பசிக்கு
என்ன செய்வேன்
ஆறுடி நிலமே
என் ஆறுதல் இடமே
இனி நான் போகிறேன்
என்னை நீ வாழ்த்திடு

நா.தளையசிங்கம்
கொக்குவில்

### தலை விதியோ

தள்ளாத வயதில்
தனயன்கள் தள்ளி விட
கை வண்டிதான் தஞ்சமென்று
நினைத்தாயோ
இதுதான் உன்தலைவிதியோ!

சு. மகாலட்சுமி
பருத்தித்துறை.

### மனிதனின் திறமை

வந்திட்ட வறுமையை
விரட்டியே ஓட்டிட
வண்டி இழுத்தேனும்
வாழவழி தேடுவது
மனிதனின் திறமையே

தங்கத் தமிழன்
காரைநகர்

### சுமைகள்

வாழ்வின் சுமைகளை
குறைக்க....
வண்டி சுமைகளை
குறைக்கின்றது

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### பயணம்

சுமைகளை சுகமாக்கி
வறுமை எனும் துயர்துடைக்க
விரைந்திடுகின்றே— உனது
வெற்றிப் பயணத்தை

க.நிறோஜலா
கரவெட்டி

சங்குநாதம்

### உழைப்பின் உயர்வு

உழைத்துக் களைத்து
உடல் இளைத்த போதிலும்
உழைப்பின் மீது
நீ கொண்ட
தளராத உறுதி
என் மென்மையான
உள்ளத்தைத் தொடுகின்றது

இந்திரா
குப்பிளான்.

### மீண்டும் புறப்படுங்கள்

உயிரை இழந்தீர்கள்
உடமையை இழந்தீர்கள்
ஆனால், உணர்வை இழக்காதீர்கள்
மீண்டும் புறப்படுங்கள்
ஒரு புதுயுகம் படைக்க

ச.மதுஷா
உரும்பிராய்

## மௌனத்தின் தேடல்- 26




அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 25.06.2010 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# கடலுக்குள் புதிய நகரம் 450 ஏக்கரில் நிர்மாணம்

## கொழும்பு துறைமுக விஸ்தாரிப்பும் மும்முரம்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் கடலை நிரப்பி 450 ஏக்கரில் புதிய நகரமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் இந்த வருட இறுதிக்குள் ஆரம்பிக்க உள்ளதாக துறைமுக அதிகாரசபைத் தலைவர் பிரியந்த விக்கிரம கூறியுள்ளார்.

துறைமுக அதிகார சபையில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது, கொழும்பு துறைமுகப் பகுதியில் 285 ஹெக்டயர் அளவு நிரப்பி விரிவுபடுத்தப்படுகிறது. இதனுடன் இணைந்ததாக கொழும்பு துறைமுகத்தில் இருந்து காலிமுகத்திடல் வரையான 450 ஏக்கர் பகுதி நிரப்பப்பட்டு புதிய நகரமொன்று உருவாக்கப் படும். கடலை நிரப்பி ஆரம்பக் கட்டப் பணிகளை துறைமுக அதிகார சபை மேற்கொள்ளும்.

இதற்காக 350 மில்லியன் டொலர் செலவிடப்படவுள்ளது.திட்டமிட்ட முறையில் புதிய நகரம் நிர்மாணிக்கப்படும். இதன்மூலமாக கொழும்பு நகரின் நெரிசல் குறைவடையும். இதுதவிர தெகிவளையில் இருந்து கொள்ளுபிட்டிவரை கடலோரமாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பாதையை காலிமுகத்திடல் வரை நீடிக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் எனவும் இதன்படி காலிமுகத்திடலில் இருந்து கொள்ளுப்பிட்டி வரையான கரையோரமும் நிரப்பப்படும் எனவும் டாக்டர் பிரியந்த விக்கிரம தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், துறைமுக விஸ்தரிப்பு இலங்கையின் கப்பதுறை வளர்ச்சிக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் உதவும்.

புதிதாக 3 முனையங்கள் அமைக்கப்படுகின்றன.38 பில்லியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இச் செயற்றிட்டம் 2012இல் முடிபு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




# இலங்கையில் மிக முன்னேற்றகரமான நகராக யாழ்ப்பாணம் மாற்றப்படும்

## -அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மிகவும் முன்னேற்றகரமான நகராக யாழ். நகரை மாற்றுவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட அவர், யாழில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

சிறந்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு சமூகத்தின் மனித வளங்களை மட்டுமன்றி பௌதிக வளங்களையும் மேம்படுத்த வேண்டும். அபிவிருத்தியை மேலும் வேகப்படுத்துவற்கு மனிதவள முகாமைத்துவம் மிகவும் முக்கியமாகும்.

எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணம் நாட்டில் முன்னேறிய நகரமாக மாற்றப்படும்.தமிழ் மற்றும் சிங்கள கலாசார பெறுமானங்களை மதித்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னேற்ற சகலரும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

# வரி குறைப்பால் கணனி விலை 30 ஆயிரமாக குறையும்

சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தனிப்பயன் கணனி80 ஆயிரம் முதல் 90 ஆயிரம் ரூபாய்களில் விற்பனையானது.ஆனால் இன்று அதே போன்ற கணனிகளை அண்ணளவாக ரூ.30 ஆயிரத்திற்கு கொள்வனவு செய்யமுடியும் என இன்ரெல் நிறுவன இலங்கைப் பிரிவு முகாமையாளர் இந்திகடிசொய்சாதெரிவித்தார்.

செப்ரெம்பர் 30-ஒக்ரோபர் 4 வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபதில் நடைபெறவுள்ள இன்போரெல் 2010 மாநாடு பற்றி விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இடையில் ஐ.சி.ரி. பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது.இது 2012, 2013-ம் ஆண்டளவில் 80 வீதமாக உயர்வடையும்.

அரசாங்கம் இலத்திரனியல் பொருட்கள் மீதான வரியை குறைக்க எடுத்த தீர்மானம் காரணமாக, சி.பி.யூ மீதான வரி கணிசமாகக் குறையும்.இதனால் உள்நாட்டு சந்தையில் கணனிகளின் விலை குறையும்எனவும்அவர்தெரிவித்தார்.

# பூச்சியத்தில் தொடக்கி உச்சங்களை தொட்ட நவலோகா முதலாளிக்கு வயது 90



நாடளாவிய ரீதியில் நவலோகா முதலாளி என அறியப்பட்ட எச்.கே. தர்மதாஸ கடந்த 17-ம் திகதி தனது 90ஆவது வயதில் நுழைந்தார்.

இன்று இலங்கை வர்த்தக உலகில் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ள எச்.கே. தர்மதாஸ செல்வச் சீமானாகப் பிறக்கவில்லை. முறைப்படியான கல்வியும் கிடையாது.

மாத்தறையில் சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர்,13ஆவது வயதில் தந்தையார் காலமானதையடுத்து 75 சதத்துடன் வீட்டை விட்டு வெளியேறி கொழும்பை வந்தடைந்தார்.

கடுமையாக உழைக்கும் இயல்புடைய தர்மதாஸ, மனப்பெரி முதலாளி, பியதாச முதலாளி போன்றவர்களிடம் பணியாற்றினார். இந்நிலையில் திருப்பு முனையாக உறவினரின் களு ஹோட்டாலாய என்ற ஹோட்டல் கிடைத்தது.இதையே பின்னர் நவலோகா ஹேட்டலாய என மாற்றினார்.படிப்படியாக முன்னேறிய தர்மதாஸவின் வர்த்தக நடவடிக்கைகள் விரிவு பெற்றன.

ஹோட்டல் ,மரத்தளபாட வணி



கம் ,கட்டுமானம், கைத்தொழில் துறைகள் ,பொலித்தீன் ,உற்பத்தித் துறை,வீடமைப்பு ,மருத்துவத்துறை போன்ற துறைகளில் நவலோகா குழுமத்தின் 16 கம்பனிகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. தனது வர்த்தக அடைவுகளிலேயே பிரதானமாக நவலோகா வைத்தியசாலையை குறிப்பிடுகிறார். இன்று நவலோகா குழுமத்தில் 7 ஆயிரம் பேர் பணி புரிகிறார்கள்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.81 | 114.36 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 168.07 | 171.48 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 138.41 | 141.71 |
| சுவிஸ் பிராங் | 101.20 | 104.30 |
| கனேடிய டொலர் | 107.96 | 111.47 |
| அவுஸ்திரேலிய டொலர் | 98.00 | 100.93 |
| சிங்கப்பூர் டொலர் | 81.01 | 82.91 |
| ஜப்பான் யென் | 1.24 | 1.27 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.94 | |

# மிலங்கா விலைச்சுட்டியில் பட்டியலிடப்படவுள்ள 25 கம்பனிகள்

01ஜூலை 2010-31டிசம்பர் 2010 வரை மிலங்கா விலைச்சுட்டியில் பட்டியலிடப்படவுள்ள 25 கம்பனிகள் வருமாறு,

**வங்கி, நிதி மற்றும் காப்புறுதி:** கொமர்ஷல் வங்கி,டி.எப்.சி.சி வங்கி,ஹற்றன் நஷனல் வங்கி, ஜனசக்தி இன்சூரன்ஸ்,மேர்ஷன்ட் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி (என்.டி.பி), நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி, பான் ஏசியா வங்கி,சம்பத் வங்கி, செலான் வங்கி.

**உணவு மற்றும் குடிவகை:** டிஸ்ரிலறிஸ் கம்பனி, **பல்பொருள் வர்த்தகம்:**ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், றிச்சட் பீரிஸ், **உற்பத்தித்துறை:** ஏ.சி.எல்.கேபிள்ஸ்,செவரன் லுப்ரிக்கன்ஸ் லங்கா, **தொலைத் தொடர்புத் துறை:**டயலொக் ரெலிகொம், **ஹோட்டல் மற்றும் பிரயாணம்:**ஏசியன் ஹோட்டல்ஸ் அன்ட் புறப்பட்டிஸ், ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ்.

**சுகாதாரம்:**நவலோகா ஹோஸ்பிட்டல், **முதலீடு:** என்வெயர்மென்டல் றிசோசஸ் இன்வெஸ்மென்ட், **லான்ட் அன்ட் புறப்பட்டிஸ்:** ஓவசீஸ் றியாலிட்டி (சிலோன்), **வலு மற்றும் சக்தி:**லங்கா ஐ.ஓ.சி., **இரசாயனம் மற்றும் மருந்துஉற்பத்தி:**கெமிக்கல் இன்டஷ்ரிஸ், **கட்டுமானம் மற்றும் பொறியியல்:**கொழும்பு டெக்யாட், **வர்த்தகம்:**பிறவுண் அன்ட் கம்பனி.

# பேஸ்புக்கின் 2009-ன் வருமானம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்

(லண்டன்)

ஆரம்பித்த சிறிது காலத்தில் அசுர வளர்ச்சி கண்ட பேஸ்புக்கின் 2009-ம் ஆண்டின் வருமானம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என பிரிட்டன் செய்தி நிறுவனமான ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து பேஸ்புக் நிறுவன அதிகாரி மார்க் அன்டர்சன் கூறுகையில்,பேஸ்புக் குறுகிய காலத்தில் இமாலய வளர்ச்சி அடைந்துள்ளதாகவும்,கடந்த ஆண்டில் 700 மில்லியன் வருமானம் பெறும் என திட்டமிட்ட எங்களுக்கு பெரும் ஏமாற்றமே நிகழ்ந்ததாகவும், அந்த ஆண்டில் தங்களுக்கு 500 மில்லியன் டொலர்கள் மட்டுமே கிடைத்ததாகவும்,2010-ம் ஆண்டில் 700 மில்லியன் டொலர்கள் கிடைக்கும் என திட்டமிட்டிருந்த தங்களுக்கு 800 மில்லியன் டொலர்கள் கிடைத்தது மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிட்டதாக தெரிவித்தார்.இதன் மூலம் 2010-ம் ஆண்டில் ஒரு பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக வருமானம் ஈட்டுவோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4601.55 | 10.38 |
| மிலங்கா விலைச்சுட்டி | 5290.17 | 28.42 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 2258.15 | |

***உயர்வடைந்த பங்குகள்*:** சம்பத் வங்கி ,சிலோன் ரொபாக்கோ கம்பனி, சென்ரல் பினான்ஸ் கம்பனி ,ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் ,ஓவசீஸ் றியாலிட்டி.
***சரிவைக் காட்டிய பங்குகள்*:** கார்ஷன்ஸ் ,நெஸ்ரல் லங்கா ,ஏசியன் ஹோட்டல்ஸ் ,என்வெயர்மென்டல் றிசோசஸ் ,கொமர்ஷல் வங்கி.

# இந்தியாவின் தனிநபர் வமானம் 4 ஆயிரத்து 100 டொலராக உயரும்!

அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் தனிநபர் வருமானம் சுமார் ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 554 இந்திய ரூபாயாக(4100 டொலர்) உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில்தனிநபர் மாத வருமானம் 15 630 ரூபாயாகும் என ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியா அறிவுசார் தொழில்நுட்பத்தில் தலைசிறந்து விளங்குகிறது. இந்தியாவில் அறிவுத்திறனும், ஆற்றலும் உள்ள சாதனைச் சுவடுகளை பதிக்கும் இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.அதேபோல் பொறியியல் மற்றும் தொழில்வல்லுநர்கள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கப்பட்டு வருகின்றனர்.

தகுதியும்,திறமையும் உள்ள படித்த இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் கிடைப்பதால்,உற்பத்தித் திறன் மேம்பாடு,நாட்டின் மொத்த உள்நாட்டு வளர்ச்சியில் எழுச்சி ஏற்படும்எனவும், 2040-ம்ஆண்டில்தனிநபர்ஆண்டுவருமானம்ரூ.450,892 ஆக உயரும் எனவும்,இது 2050 இல் ரூ.958,500 ஆக வியத்தகு அளவில் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்போசிஸ் ஊழியரில் 40% கிராமங்களை சேர்ந்தவர்கள்

(பெங்களூர்)

தகவல் தொழில்நுட்ப சேவையில் சிறந்து விளங்கும் இன்போசிஸ் நிறுவனத்தில் புதிதாக சேர்ந்த ஊழியர்களில் 40சதவீதம் பேர் கிராமப் புறங்களில் இருந்து வந்தவர்கள் என அதன் தலைமை நிறைவேற்று அதிகாரி கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிறுவனத்தில் புதிதாக சேர்ந்த ஊழியர்களில் 40 வீதம் பேர் கிராமப் புறச் சூழலில் இருந்து படித்து வந்தவர்கள். மேலும் இதில் அதிகமானோரின் பெற்றோர்10 ஆம் வகுப்பைக் கூடத் தொடாதவர்கள்.நடுத்தர குடும்பங்களில் இருந்து வரும் ஊழியர்கள்புதிய சிந்தனைகளுடன்,திறமையாகவும் செயல்படுகிறார்கள் எனத் தெரிவித்தார்.

# தமிழரின் நலன் குறித்துப் பேசுவதற்கு குமரன் பத்மநாதன் என்பவர் யார்?

## தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கேள்வி

அரசுக்கு உதவ முன்வந்துள்ள முன்னை நாள் இயக்கப் போராளிகளின் ஆதரவாளர்களும் புத்திஜீவிகளும் யார் என்று கேள்வி எழுப்பி தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கை இங்கு பிரசுரமாகின்றது.

(ஆ.ர்)

## கே.பி. யுடன் பேசலாம் என்றால் புலிப்போராளிகளை ஏன் விடமுடியாது

யுத்தம் முடிந்த பின் நாட்டின் புனர்நிர்மாணம், மீளக்கட்டியெழுப்புதல் போன்றவைகளுக்கு அரசுக்கு உதவ முன்னைநாள் போராளிகளின் அனுதாபிகள்



புத்திஜீவிகள் முன்வந்துள்ளதாகிய செய்தி வெறும் கேலிக்கூத்தாகும். யார் இந்த கே.பி. என அழைக்கப்படும் பத்மநாதன் என்பவர்? அவருக்குரிய நன்மதிப்பு என்ன? பிற நாடுகளில் இருந்து தூதுக் குழுவாக வருகை தந்து அரச உயர் அதிகாரிகளுடன் பேசி நாட்டின் புனர்வாழ்வு, மீள் கட்டுமானப் பணிகளுக்கு உதவ வந்துள்ள புத்திஜீவிகளாக வர்ணிக்கப்படும் இவர்கள் யார்? சர்வதேச அரங்கில் பிரசித்தி பெற்ற பெயர் போன பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்ட கே.பி.யின் தலைமையில் இக்குழு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துள்ளது என்ற செய்தி எனக்கு பெரும் ஆச்சரியமாகவும் அனேகமாக முழு இலங்கையருக்கு அதிர்ச்சியும் தந்துள்ளது.

பிரபாகரன் மரணித்த உடன் அவரின் வாரிசாக உரிமை கோரிக்கொண்டு விடுதலைப்புலிகளின் தலைவர் எனக் கூறிக்கொண்ட கே.பி. அதிகாரிகளிடம் தானாக சரணடையவில்லை. மிக்க தந்திரமான முறையில் அவர்கள் கைது செய்யப்படாதிருந்தால் இன்று அவர் கடந்த காலத்தில் பிரபாகரன் யார் யாருக்கு அச்சறுத்தலாக இருந்தாரோ அத்தனைபேருக்கும் இவர் அச்சுறுத்தலாக இருந்திருப்பர். இப்போது கூட அவர் எதிர் காலத்தில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அச்சுறுத்தலாக இருக்கமாட்டார் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. அரசுக்கு அதன் புனர்நிர்மாண, மீள் கட்டுமாண பணிகளுக்கு அரச உயர் அதிகாரிகளை சந்தித்து உதவ முன்வந்துள்ள தூதுக் குழுவில் இடம்பெற்றுள்ள புத்திஜீவிகளாக வர்ணிக்கப்படும் இவர்கள் யார்? சரி பிழைகளை ஆராய்ந்து அறிவை வளர்ப்பவரே புத்திஜீவியாவார். ஆனால் இந்த புத்திஜீவிகள் என்ன செய்தார்கள். சரி பிழைகள் ஆராய்ந்து முடிவெடுக்கும் ஆற்றல் இவர்களுக்கு இருக்கிறதா?

சிறிய அபிப்பிராய பேதங்களுக்கு நாம் இடம் கொடுக்காது பல கஷ்டங்களுக்கு மத்தியில் வென்றெடுத்த சமாதானத்தை நிலைக்கச் செய்ய வேண்டும் என்று கே.பியோ அன்றி அவரின் அணியில் உள்ள வேறுயாருமோ எமக்கு கூறுவது கேலிக்கிடமாகும். இலங்கையராகிய நாங்கள் இந்த புத்திஜீவிகள் யார் என்பதனையும் வெளிநாட்டில் வாழும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைக்கு உதவுபவர்கள் நாட்டின் கள நிலையை விளங்கிக் கொள்ள தொடங்கிவிட்டார்கள் என்று உத்தரவாதம் தருவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை இருக்கின்றது. இவர்களுக்கு இதுவரை காலமும் கள நிலைபற்றி விளங்காமல் போனது கவலைக்குரியது. மீண்டும் ஒரு தடவை எவரேனும் எம் மீது சவாரி செய்ய அனுமதிக்கக்கூடாது. இத்தகைய எவருடனும் அரசு எத்தகைய தொடர்பு வைத்திருப்பதை ஆட்சேபிக்கும் உரிமை எமக்குண்டு.

இவர்களுடன் நாம் உறவு வைத்திருப்பதை பார்த்து உலக நாடுகள் நகைக்கும் என்பதோடு இந்நாட்டு மக்கள் ஒருவர் இருவருக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே துரோகம் செய்ததாக கருதப்படும். நம் நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் இவர்களால் பாதிக்கப் பட்டவர்கள் தான். நாம் ஏறக் குறைய இரண்டு இலட்சம் உயிர்களை இழந்துள்ளோம். அவற்றில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள், ஆயிரக்கணக்கான படை வீரர்கள், பலாத்காரமாக விடுதலைப்புலிகளுடன் இணைக்கப்பட்ட போராளிகள் பலர் அடங்குவர். ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் விதவைகளாக்கப்பட்டதோடு ஆயிரக்கணக்கானவர்கள் அநாதைகளாகவும் ஆதரவற்றவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 42 ஆயிரம் பேர் விதவைகள் உருவாக்கப்பட்டுள்ளனர். எத்தனையோ பேர் தமது பார்வைகளையும் கால்,கைகளையும் இழந்துள்ளனர். இரு கால்களையும் இரு கைகளையும் இழந்தவர்கள், ஒரு காலால் நடப்பவர்கள் தவழ்ந்து திரிகின்றவர்கள் இவ்வாறு பலர். இந்த அப்பாவிகள் அனைவரும் எஞ்சியுள்ள நாட்களை இப்படித்தான் செலவிட வேண்டும் என்பது விதி.

எத்தனைஆயிரம் மாணவர்கள் தம் கல்வியை இழந்துள்ளனர். இப்பிள்ளைகளின் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் பலாத்காரமாக கொண்டுசெல்லப்பட்டு உயிரற்ற சடலங்களாக கண்டபோது அனுபவித்த கவலைகள் பற்றி இப்புத்திஜீவிகள் அறிவார்களா?ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டு அல்லது தமக்கு மிகவும் விருப்புடைய ஒரு உறவை இழந்திருந்தால் மட்டும்தான் இந்த வேதனையை உணர முடியும்.

பல கோடி பெறுமதியான தனியார் பொதுச்சொத்துகள் அழிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி,முல்லைத்தீவு பகுதியில் முழுமையாக ஒருவீடும் இல்லை. வவுனியா,மன்னார், யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதிக்கும் இதே கதி தான்.கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து இரண்டு ஆண்டுகளின் பின்பும் எமது மக்கள் கூடாரங்களில் தான் வாழுகின்றனர். கிளிநொச்சி,முல்லைத்தீவில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அக்கிராமங்கள் இவ்வாறு சீரழிக்கப்பட்டுள்ளன என்றும் அங்கு ஏற்படுத் தப்படுத்தப்பட்டுள்ள அழிவுகளையும் அரசு பார்வையிட வேண்டும்.

உண்மையாக நான் ஏமாற்றப்பட்டுவிட்டேன் என்பதை உணருகின்றேன். கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக துன்பங்களை அனுபவித்த மக்களுக்கு ஏற்படுத்தப்படுத்தப்பட்டுள்ள ஏமாற்றம் எனக்கு ஏற்பட்டதைவிட அதிகமாகும். இப்புத்திஜீவிகள் எங்கிருந்து வந்தார்களோ சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இவர்களை நாடு கடத்தி தரும்படி இலங்கை அரசு கோரிக்கை விடவேண்டும். விடுதலைப்புலிகளின் கடும் போக்காளர்களை இராணுவம் உபசரிக்கும் போது தடுப்புக்காவலில் உள்ள 10 ஆயிரம் பேரில் பெரும்பகுதியினர் விடுதலைப்புலிகளினால் பலாத்காரமாக சேர்க்கப்பட்டிருப்பதனால் அவர்களை ஏன் தொடர்ந்தும் தடுப்புக்காவலிலும் சிறையிலும் அரசு வைத்திருக்கிறது என்று கேட்கின்றார்கள். இத்தகைய நபர்கள் தான் பின்னணியில் இருந்து எமக்கு ஏற்பட்ட உயிர் இழப்புகளுக்கும் பொருள் இழப்புகளுக்கும் பொறுப்பாக இருக்கின்றார்கள். ஆகவே அரசு வீடு இழந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து முழு நட்டஈடு வழங்க வேண்டும். இரண்டாவதாக உயிர் இழப்புக்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஏனைய இழப்புக்களுக்கு முழு நட்ட ஈடு வழங்கப்படவேண்டும். அரசு தாமாதிக்காது மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு இழப்புகளின் பெறுமதியை கணக்கிடும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். குண்டுவெடிப்பு, தற்கொலைத்தாக்குதல், கண்ணிவெடி போன்றவற்றுக்கு பலியாகிய நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்களுக்கு முழு நட்ட ஈடு வழங்க வேண்டும். நாட்டின் பிற பகுதியில் இருந்து 500 ரூபாயுடன் வெளியேற்றப்பட்ட இஸ்லாமிய



மக்கள் முழுச்சொத்தையும் இழந்தமையால் முழு நட்ட ஈட்டுடன் மீளக் குடியமர்த்தப்படவேண்டும். அன்று தொட்டு இன்றுவரையும் இவர்களில் அநேகர் மிக வறுமைப்பட்டு வாழ்கின்றார்கள். இது பல விதத்தாலும் பாதிக்கப்பட்ட ஒரு தனி மனிதனின் உணர்ச்சி மிக்க உள்ளக்குமுறலின் வெளிப் பாடாகும். கிளிநொச்சியில் வாழ்கின்ற உரிமை மறுக்கப் பட்டது உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களின் குறிப்பாக வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் கருத்துக்களினைத்தான் நான் பிரதிபலிக்கிறேன். நான் செய்வது தவறு என யாரும் கருதினால் நான் அவர்களிடம் அதற்கு மன்னிப்புக்கோரி ஒத்த கருத்துள்ளவர்களை எமது பணி தொடர ஆதரவு நல்குமாறு வேண்டுகின்றேன்.

**வீ.ஆனந்தசங்கரி**
**தலைவர்,**
**தமிழர் விடுதலைக்கூட்டணி.**

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் நஞ்சுண்டான் காட்டு மக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள ஸ்கந்தபுரம் கிராமத்தின் வடக்குப் பக்கமாக வுள்ள கிராமம்தான் நஞ்சுண்டான் காடு.இக்கிராமத்தில் தற்போது மீளக் குடியேறிய மக்கள் அடிப்படை வசதி களற்றுள்ளனர்.

இக்கிராமத்துக்கு பேருந்து போக்குவரத்து முழுமையாக இல்லை. இதனால் துவிச்சக்கர வண்டியின் உதவி மூலமும் கால் நடைப் பயணத்தின் மூலமும் தமது போக்குவரத்தை மக்கள் மேற் கொள்கின்றனர்.

இதேபோன்று மருத்துவ வசதியும் இக்கிராமத்திற்கு கிடைப்பது இல்லை. இக்கிராமமானது காட்டுப் பகுதியையும் வயல் நிலங்களையும் கொண்ட பிரதேசம் என்பதால், விச ஜந்துக்களின் கடிக்கு அதிகமானோர் ஆளாகுவதால் நீண்டதூரம் சென்றே மருத்துவ சிகிச்சை பெற வேண்டியிருக்கிறது.

அதாவது 20 கி.மீ.தூரத்திலுள்ள பூநகரி மருத்துவமனைக்கோ அல்லது 10 கி.மீ.தூரத்திலுள்ள அக்கராயன் குளம் மருத்துவ மனைக்கோ அல்லது 15 கி.மீ. தூரத்திலுள்ள கிளிநொச்சி மருத்துவமனைக்கோ தான் சென்று சிகிச்சை பெறவேண்டிய சூழ்நிலையே காணப்படுகிறது.

2008 ஆம் ஆண்டுக்கு முன்பு, இங்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கிய மருத்துவ நிலையமே இப்பகுதி மக்களுக்கு தனது சேவையை செய்து வந்ததுடன் மேலதிக சிகிச்சை பெறுவதற்குரிய நோயாளர்களை தமது நோயாளர் காவு வண்டியின் உதவியுடன் கிளிநொச்சிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இக்காலப் பகுதியில் தனியார் வாகனங்களும் இக் கிராமத்தில் இருந்ததுடன் பயணிகள் போக்குவரத்துச் சேவையும் இடம்பெற்றது. ஆனால் இக்கிராமத்தில் தற்போது எந்தவிதமான மருத்துவ நிலையங்களும்இல்லாமையால் நோயாளிகள் பெரிதும் பாதிப்புறுகின்றனர்.

இத்துடன் தற்போதைய வரட்சியால் குடிநீருக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இக்கிராமத்துக்கு அக்கராயன் குளத்து நீரே பெரும்பாலும் நீர்ப்பாசன வாய்க்கால் மூலம் (கழிவுநீராக) வருகின்றது. இவ் நீரும் ஸ்கந்தபுரம் பகுதி விவசாய நிலங்களின் இரசாயனப் பசளை,கிருமிநாசினிகள் கலந்து நீராகவே வருவதால் (மாசுபட்ட கழிவு நீராக) இதில் குளிப்பவர்கள் பலர் நோய்களுக்குள்ளாகின்றனர்.

சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் இவ் விடயங்களை கவனத்தில் எடுத்து இக்கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை வழங்கும்படி இக்கிராமத்தில் மீள் குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர். (6-22)

## ஸ்கந்தபுரம் சீனித் தொழிற்சாலையை இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டம் கிராமத்தில் சுமார் 20 வருடங்களாக இயங்காதுள்ள சீனி உற்பத்தி நிலையத்தை இயங்கவைப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

யுத்த சூழ்நிலை காரணமாக இவ் ஆலை முழுமையாக 22வருடங்களாக செயலிழந்து காணப்படுகின்றது. இங்கிருந்த இயந்திரங்களும் களவாடப்பட்டுள்ளன.

சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் முன்பு கரும்பு செய்கை பண்ணப்பட்டது.இதுவும் அழிக்கப்பட்டு வேறு விவசாயம் பண்ணப்பட்டது.இதனால் சிலரது விவசாய நிலங்களிலேயே கரும்பு பயிர்கள் வளர்ந்து காணப்படுகின்றது.

இத்தொழிற்சாலையை இயக்கினால், இக்கிராமத்தவர்களுக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கும் என மக்கள் நம்புகின்றனர். இருந்தும் இது கந்தளாய் சீனித்தொழிற்சாலையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது குறிப்பிடத்தக்கது. (6-22)

# வரலாற்று சின்னங்களை பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(வேலணை)

கிளிநொச்சி அக்கராயன் குளம் தமிழர் வரலாற்றில் உள்ள கிராமங்களில் ஒன்று. இங்கு பண்டைய தமிழ் மன்னர்களின் ஆட்சிப்பீடம் அமைந்திருந்த இடங்களும் சில பண்டைய காலத்து கட்டடங்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் இருக்கிறது. 2004-2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு வேலுவாராய்ச்சி நடைபெற்று இப் பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வந்ததுடன் இங்கு கண்டெடுக்கப்பட்ட சில தொல்லியல் பொருட்களும் சம்பந்தப்பட்டவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தினால் இப்பகுதி வாழ் மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்து பல அசௌகரியங்களையும் துன்பங்களையும் சுமந்து இறுதியில் இப்போது தமது கிராமங்களுக்கு வந்து மீள்குடியேறியுள்ளனர்.

இப்பகுதிகளில் இருந்த பெறுமதி மிக்க சிலைகள் மற்றும் தொல்லியல் சின்னங்கள் 2008 ஆம் ஆண்டு நடந்தேறிய யுத்தம் காரணமாக காணாமல் போயுள்ளதுடன் சில முழுமையாக அழிக்கப்பட்டும் உள்ளன.

இருந்தும் அக்கராயன் குளத்துக்கு மேற்குப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட தொல்லியல் இடம் அழிக்கப்பட்டுள்ளதா என அல்லது இங்கிருந்த தொல்லியல் பொருட்கள் களவாடப்பட்டுள்ளனவா என தெரியாத நிலையில் இதைப் பாதுகாத்து தருமாறு இக்கிராம மக்களும் ஆர்வலர்களும் அரச அதிகாரிகளிடமும் யாழ். பல்கலைக்கழக வரலாற்று துறையினரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தமிழர்களின் பண்டைய வரலாற்றை பாதுகாப்பது எல்லோரினதும் கடமையாகும். அழியாது பாதுகாப்பதற்கு எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டுமெனவும் மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-22)

## நிபுணர்கள் குழு நியமனத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ள நாடுகள்

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்தும் நிபுணர் குழு நியமனத்திற்கு அணி சேரா நாடுகள், சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இலங்கையில் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றனவா என்பது தொடர்பில் இந்த நிபுணர் குழு ஆராய்ந்து பான் கீ மூனுக்கு அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது.

நிபுணர் குழு நியமனம் தொடர்பில் அணிசேரா நாடுகள், சீனா மற்றும் ரஷ்யாவின் நிலைப்பாடுகளை ஜனாதிபதி கேட்டறிந்து கொண்ட போது குறித்த நாடுகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

நிபுணர்கள் குழுவை நியமிப்பது குறித்த தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் பாதுகாப்புப் பேரவை அல்லது பொதுச்சபையில் அனுமதி பெற்றிருக்க வேண்டுமென ரஷ்ய வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் வீட்டோ அதிகாரத்தைக் கொண்ட சீனாவும் நிபுணர்கள் குழு நியமனத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (6)

## சட்டவிரோத மதுபான சாலைகள் அதிகரிப்பு


(கொழும்பு)

மட்டக்களப்பில் சட்டவிரோத மதுபானசாலைகள் தற்போது அதிகரித்துக் கொண்டே செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இதன் காரணமாக நாளாந்தம் பல சமூக சீர்கேடுகளும் நிகழ்கின்றன. குறிப்பாக நாளாந்தம் கூலித்தொழில் செய்பவர்களே இந்த விடயத்தில் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக நகரை அண்டிய பகுதிகளில் உள்ள சில வீடுகளில் சாதாரணமான முறையில் 24 மணி நேரமும் மதுபானம் விற்பனையாகின்றன. இதனால் சில வீதிகளில் நள்ளிரவிலும் கூட மது போதையில் ஆடவர்கள் தள்ளாடி திரிகிறார்கள்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் அலட்சியப் போக்கை கடைப்பிடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று பூங்காவனத் திருவிழா

### நாடிடுவீர் நயினைக்கே...

வேப்பமரச் சோலையிலே
வெண்மணலின் நடுவினிலே – தாய்
வீற்றிருந்து அருள்தருவாள்
விடிவுதனைக் காட்டிடுவாள் – கை
கூப்பிவரும் அடியவரின்
குறைகள் எல்லாம் தீர்த்திடுவாள் –என
நாற்றிசையும் நம்புவதால்
நாடிடுவீர் நயினைக்கே

வி.துரைராஜசிங்கம், காரைநகர்

### ஓடி வருவாயம்மா!

ஓடி வருவாயம்மா உன் முகம் காண்பதற்கு
நயினை உறை நாயகியே நாகபூசணித் தாயே
தேடி வந்து நீ எம்மை தீண்டும்பின்பம் தரும்போது
பாடிவந்த பாக்கள் எல்லாம் பாவவினை தீர்க்குமிங்கே
கூடிநின்ற பக்தரெல்லாம் பாடிநின்று வழிபடவே
நாடிவந்து நலம்காக்க நாயகியே அருளும்மா
மாடிதனில் ஏறிநின்று மகமாயி உனைக்கண்டு
வாடி அழுத எம் விழிக்கு வல்லதுணை தாராயோ!

திருமதி இ.விமலசோதி

### பேரருளைத் தாருமம்மா!

ஞான ஒளிவடிவே நாயகியே – நயினை மெஞ்
ஞான அருள் நிதியே பூரணியே – தாயே
காணும் பொருளனைத்தும் காரணியாய் – நிறைந்தவளே!
வானும் கடலும் உனை வாயார போற்றுதம்மா
– ஞான ஒளிவடிவே நாயகியே

பூதங்கள் ஐந்திலும் பூரணமாய் நிறைந்தவளே – நின்
பாதங்கள் தொழுமவர்க்கு பாவங்கள் –களைபவளே !
கீதங்கள் இசைந்தொழுக வேதமாய் நின்றவளே!
பேதங்கள் அறுத்து எவர்க்கும் பேரருளை தாருமம்மா
– ஞான ஒளிவடிவே நாயகியே

ச.இராசநாயகம், ஊர்காவற்றுறை

### உன் அடியை சரண் புகுந்தோம்

நயினை நகர் உறையும் நாகபூசணியே
நாற்றிசை அடியவர்கள் போற்றும் நாயகியே
பாம்பினின் நிழலினிலே பள்ளி கொள்பவளே
பாரில் உள்ளோர் படும் துயரை தீர்த்திடுவாய்
நாகவடிவாகி நற்கருணை புரிபவளே
நாட்டினிடை நல்வாழ்வு மலர்ந்திடவே
தரணியெல்லாம் புகழ்படைத்த தாய்த் தெய்வமே
தஞ்சமென்று உன் அடியை சரண்புகுந்தோம்

எஸ்.ரீ.குமரன்

### ஓதுகின்றோம் நாமம் உன்னருள் தாருமம்மா

தாயொடு மழலைகளும் தந்தையொடு உறவுகளும்
காய்கனி பிஞ்சொடு கவினுறு சொத்தனைத்தும்
மாய்ந்தழிந்த பின்னும் மீண்டும் உன்னருள் வேண்ட
மீதியாய் நிற்போரெல்லாம் தாயே நீ கதியென்று
தாளாத பக்தியோடு தண்ணீரைத் தான்கடந்து
சாதிமத பேதமின்றி சகோதரர்கள் நாமொன்றாய்
மோதுமுன் கடலலை போல் தேருலாக் காணவந்து
ஓதுகின்றோம் நாமம் உன்னருள் தாருமம்மா

கவிமணி அன்னைதாசன், ஊரெழு

# இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை நான்கு மாதங்களில் அறிக்கை சமர்ப்பிப்பு

## விசாரணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(சிட்னி)

இலங்கை அரசாங்கத்துடனான எந்த உறவும் தொடர்பும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தின் ஊடாக மட்டுமே நடைபெறும். நாம் விசாரணைகளை மட்டுமே மேற்கொள்வோம்.

இவ்வாறு இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்ற விசாரணைகளை மேற் கொள்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் தலைவர் மர்ஸிக் டாருஷ்மன் தெரிவித்தார்.

இலங்கையில் நடந்த போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீமூன் மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளார்.

இக்குழுவின் தலைவர் மர்ஸிக் டாருஷ்மன் அவுஸ்திரேலிய வானொலிக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவர் வழங்கிய செவ்வியின் விபரம் வருமாறு,

இலங்கை அரச படைகளும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற இறுதிப் போரில் இரண்டு தரப்பும் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி ஐ.நா.செயலாளர் நாயகத் திற்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட குழு இது.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைய முற்பட்டவர்கள் கொல்லப்பட்டது குறித்தும் இது விசாரணை நடத்தும். எனினும் இந்த நடவடிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு கோபமூட்டியுள்ளது. இந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் இலங்கைக்கு வர விசா வழங்கப்படமாட்டாது என இலங்கை அரசு வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறது.

டாருஷ்மன்: இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் பற்றி தனக்கு ஆலோசனை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த ஒரு குழு இது.

**கேள்வி:- இந்தக் குழு பெரும்பாலும் ஆலோசனை வழங்கும் நடவடிக்கையையே மேற்கொள்ளும் என்று ஐ.நா.வின் பேச்சாளர் ;தெரிவித்திருக்கிறார். ஆக, இந்தக் குழு இலங்கையின் அரசின் விசாரணைகளுக்கு உதவி வழங்குமா? அல்லது சுதந்திரமாக விசாரணையை மேற்கொள்ளுமா?**

டாருஷ்மன் : இது ஐ.நாவின் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்துடனான எந்த உறவும் தொடர்பும் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தூடாகவே இட றும்.

**கேள்வி: -ஆக, நீங்கள் சொல்கிறீர்கள் இது இலங்கை அரசாங்கத்துடைய விசாரணைகளுக்கு ஆதரவளிப்பதென்பதல்ல. சுதந்திரமாக விசாரணைகளை மேற்கொள்ளும் என்று?**

டாருஷ்மன்: நாங்கள் ஒரு போதும் எந்த அரசாங்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. நாங்கள் எங்களுடைய தனிப்பட்ட வழிமுறைகளிலேயே தங்கி நிற்கிறோம்.

**கேள்வி:- இந்த ஆலோசனைக்குழுவின் விசாரணைகளுக்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை என்று இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டத்தினர் தெரிவித்திருக்கின்றனரே? இது உங்களுடைய பணிகளை எவ்வாறு பாதிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

டாருஷ்மன் : இதற்கு நான் அபிப்பிராயம் எதனையு சொல்லப்போவதில்லை. நாங்கள் செயலாளர் நாயகத்தை சந்தித்த பின்னரே எங்களுடைய பணி என்ன என்பது எங்களுக்கு சரியாகத் தெரியவரும்.

**கேள்வி:-விசாரணைகளில் எவ்வாறான சவால்கள் இருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

டாருஷ்மன்:- விடயங்களைச் சேகரிப்பதும் முன்வைப்பதுமான ஆலோச னைக் குழுவின் பணிகள் சவாலானவை தான். அது நாட்டுக்கு உள்ளே என்றால் என்ன அல் லது நாட்டுக்கு வெளியே என்றா லென்ன? இதில் உள்ள துரதிஷ்டம் என்ன வென்றால் இந்த ஆலோசனைக்குழு தனக்குக் கிடைக்கும் விடயங்களை இலங்கை அர சாங்கத்துடன் சரிபார்க்க வாய்ப்பில்லாது போய்விடுவது தான்.

**கேள்வி:-எனக்குத் தெரியும் இந்தக் கேள்வி இவ்வளவு விரைவாக கேட்கப்படக் கூடியதன்று. ஆனாலும் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? கள நிலைமைகளை அவதானிப்பதற்கு இலங்கை செல்வதற்கு உங்களுக்கு விசா கிடைக்கு மென்று?**

டாருஷ்மன்: நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம் இந்த ஆலோசனைக்குழு தனது பணிகளைச் செய்வதற்கான வாய்ப்பு பெருமளவில் இருக்கும் என்று. ஆனாலும் மீண்டும் நான் இங்கே வலியுறுத்த விரும் புவது இலங்கைக்கு போவதற்கான வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ என்பதைப் பொறுத்தல்ல. இவ் விடயத்தை நாங்கள் மேற்கெள்ள ஆரம்பித்தது நாங்கள் போவதா இல்லையா என்பதை செயலாளர் நாயகம் தீர்மானிப்பார்.

**கேள்வி:- எப்போது இந்தக்குழுவினரின் விசாரணைகள் ஆரம்பமாகும். அது முடிவடைய எவ்வளவு காலம் எடுக்கும்?**

டாருஷ்மன்: நாம் இப்போதே பணிகளை ஆரம்பிக்கலாம். நான்கு மாதங்களுக்குள்



இவ் ஆலோசனைக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும். எனவே நாம் உடனடியாக பணிகளை ஆரம்பித்தாக வேண்டும். ஐ.நா. செயலாளர் நாயகத்தினதோ அல்லது அவருடைய அலுவலகத்தினதோ மேலதிக ஆலோசனைக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அதன் பிறகு ஆலோசனைக் குழுவின் முழுக் காலத்திற்குமான திட்டம் வரையப்படும். எந்த விதமான அறிக்கைகளையும் நாம் வெளியிட முதல் ஆலோசனைக் குழுவின் பணிகள் திட்டமிடப்பட வேண்டும்.

**கேள்வி:- இவ்ஆலோசனைக்குழு பாரியளவிலான வன்முறைகள் மேற் கொள்ளப்பட்டது என கண்டறியுமானால் போர்க் குற்ற நீதிவிசாரணை மேற்கொள்ளப் படவேண்டும் என செயலாளர் நாயகத்திற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?**

டாருஷ்மன்:- அதனை பின்னர் பார்ப்போம். ஒரேயடியாக நாங்கள் இப்போது குதித்துப்பாய தேவையில்லை. ஆனால் சரியான வழிமுறைகள் மூலம் உண்மை நிலைவரத்தை உலகின் முன் வைப்போம். (ந-5)

# எங்கள் மீதும் கரிசனை காட்டுங்கள்; மகசீன் தமிழ் அரசியல் கைதிகள்

(கொழும்பு)

எமது இளமைக்காலம்,கண்ணீருடனும் கவலையுடனும் சிறைச்சாலையிலேயே முடக்கப்படுகிறது. பல நல்ல திட்டங்களை நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் மேற்கொண்டு வரும் நீங்கள் எங்கள் மீதும் கரிசனை காட்டி எமக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் அல்லது பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கொழும்பு மகசீன் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தமிழ் அரசியல் கைதிகள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல வருடங்களாக சந்தேகத்தின் பேரில் கைதாகி விடுதலை கிடைக்குமா? என்ற ஏக்கத்துடனும் எதிர்பார்ப்புடனும் தங்களுக்கு வரையும் மடல் இது. எமது நாட்டில் தற்போது சுமுகமான சூழல் இடம்பெற்று வருகின்றது.

அத்தகைய சூழலிலும் எங்களால் எங்கள் குடும்பங்களுடன் இணைந்து வாழ முடியாதுள்ளது. பல வருடங்களாக வழக்குகள் இடம்பெறாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் இன்னும் எத்தனை வருடங்களுக்கு சந்தேகம் என்னும் பெயரில் தடுப்புக்காவலில் இருப்பது.

எங்களை சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதனால் குடும்பங்கள் பல இன்னல்களையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது கைதான பல விடுதலைப்புலிகளின் போராளிகளுக்கு என சிறந்த செயல்திட்டங்களைச் செய்துள்ளார். அவர்களுக்கு புனர்வாழ்வளித்தும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தும் உள்ளதுடன் அண்மையில் திருமணம் கூட நடத்தி வைத்துள்ளார்கள்.

இந் நடவடிக்கை கைதிகளாகிய எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை அளித்துள்ளது.

ஆனால் கைதாகி பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகள் என்ற பெயரில் பிணையில் கூட செல்ல முடியாமல் தடுத்து வைத்திருக்கும் எங்களின் நிலைமையை யாராவது நினைத்துப் பார்த்ததுண்டா?

அது மட்டுமன்றி, தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் குறைந்தது 5 வருடங்களில் இருந்து 17 வருடங்கள் வரை (1993 தொடக்கம் இன்றுவரை) சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

எங்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தித்தருவீர்களா? எத்தனை போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், கடிதங்கள் எனப் பலவாறான நடவடிக்கைகள் எடுத்தும் எந்தப்பலனும் கிடைக்கவில்லை. ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவோம் என்ற நம்பிக்கையும் இன்று வரை ஏமாற்றமாகி விட்டது.

தமிழ் அரசியல் கைதிகளாகிய எங்களை பிணையிலாவது செல்ல ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று எமக்கு நம்பிக்கை உள்ளது. எமது விடுதலையை துரிதப்படுத்துமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

உங்களால் எங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க முடியும். தெரிந்தோ தெரியாமலோ சிறுவயதில் தவறுகள் செய்திருக்கலாம். அதற்காக இத்தனை வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

பல நல்ல திட்டங்களை நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் செய்யும் தாங்கள் எங்கள் மீதும் கரிசனை காட்டுங்கள் என்று கைதிகளாகிய நாங்கள் அனைவரும் கண்ணீருடன் எழுதுகிறோம்.

எங்கள் அனைவரையும் அவரவர் பெற்றோர்களிடம் ஒப்படைத்து சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுங்கள் . இள வயதிலே கைதாகி, எங்கள் இளமைக்காலம் முழுவதும் வீணடிக்கப்படுகிறது.

எங்கள் விடுதலைக்காக இறுதியாக தங்களிடம் தாழ்மையுடன் கேட்கிறோம். எங்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வழி செய்யுங்கள். இல்லாவிட்டால் பிணையிலாவது செல்ல விடுங்கள் என்று தமது மன ஆதங்கங்களை வரைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஓய்வூதியர் அட்டைகள் வழங்கப்பட்டன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய சங்கத்தினால் ஓய்வூதியர் அட்டைகள் வழங்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை அன்று பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

ஓய்வூதியர் சங்கத் தலைவர் சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது ஓய்வூதியர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பல நன்மைகள் பற்றியும் அதற்கு ஓய்வூதியர்களின் ஒத்துழைப்பு பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. (6-10)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்ட பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் கு. ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக அளவெட்டி தபாலதிபர் திருமதி சு.ஞானேஸ்வரன், கௌரவ விருந்தினராக அளவெட்டி தென்னிந்திய திருச்சபையை சேர்ந்த அருட்பணி ம.யூட் சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6)

# எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் மூவர் ஆளும் கட்சியுடன் இணையவுள்ளனர்

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று முக்கியஸ்தர்கள் எதிர்வரும் நவம்பர் மாதத்தில்



ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்வார்கள் என முன்னாள் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய உயர்கல்வி அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாம் தவணைக்கால பதவிப் பிரமாணங்களின் பின்னர் இவர்கள் ஆளும் கட்சியில் இணைவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மூன்று முக்கியஸ்தர்கள் இவ்வாறு கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாகக் கூறியுள்ளதுடன், இவர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டதன் பின்னர் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2010 பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் கண்டி மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் காதர் அவர்கள் அக் கட்சியிலிருந்து விலகி ஆளும் கட்சியில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் புத்தளம் மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரும் தேர்தல் முடிவடைந்த பின்னர் அதே கட்சியைச் சேர்ந்தவர்களால் தாக்குதலுக்குள்ளானவருமான பாலித ரங்கே பண்டார அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்திருந்தமையும் சுட்டிக் காட்டப்படத்தக்கது. (6)

# இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்ட இந்து ஆலயம் மக்களிடம் கையளிப்பு

(மன்னார்)

இராணுவத்தினால் புனர்நிர்மானம் செய்யப்பட்ட மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சீது விநாயகர் குளம் பகுதியில் உள்ள இந்து ஆலயம் நேற்றுமுன் தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களினைத் தொடர்ந்து சீதுவிநாயகர் குளம் ஆலயம் சிதைவடைந்து இருந்தது.

இந்த நிலையில் அப்பகுதியில் உள்ள 19 ஆவது விஜயபாகு படையணியினர் தற்போது இக்கோவிலை புனர் நிர்மானம் செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் இராணுவ 212 ஆவது படைப்பிரிவு அதிகாரி கேணல் எம்.எ. எஸ். கெ.முகந்திரம், 19 ஆவது விஜயபாகு படைப் பிரிவின் அதிகாரி மேஜர் கயனாத் உட்பட பல இராணுவ அதிகாரிகள் விசேட பூசைகளில் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இப் பகுதிகளைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் உணவுப் பொதிகளும் விவசாய கருவிகளும் வழங்கப்பட்டது. (6)

# தமிழர்களின் அவலத்தை.....

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

அரசாங்கத்தால் சிறைவைக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி யான சிறைகள் எங்கெல்லாம் உள்ளன என் பதைப்பற்றியும் அரசாங்கம் வெளிப்படையாக எதையும் தெரிவிக்க மறுத்து வருகிறது.

தமிழர்கள் மீதான இன அழித்தொழிப்புப் போர் முடிவுக்கு வந்து ஓர் ஆண்டுக்கு மேலா கியும் கூட முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்ட தமிழர்கள் முழுவதுமாக அவர்க ளது சொந்த ஊர்களுக்கு அனுப்பப்படாத நிலைதான் உள்ளது. இதற்குச் சரியான பதில் எதையும் இலங்கை அரசு தெரிவிக்க வில்லை. மூன்று இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்க ளில் ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 772 பேர் மட்டுமே அவர்களுடைய கிராமங்களுக்கு அனுப் பப்பட்டுள்ளனர். மற்றவர்கள் முகாம்களிலேயே தான் தொடர்ந்து வைக்கப் பட்டிருக்கிறார்கள். தமிழர்கள் தமது சொந்த ஊர்களுக்கு அனுப் பப்படாததற்கு முக்கியமான காரணம் , அவர் களுடைய நிலங்களை எல்லாம் இராணுவம் பலவந்தமாக கையகப்படுத்தி வருவது தான் வன்னிப்பகுதியில் பல இடங்களில் இவ்வாறு நிலம் இராணுவத்தால் கையகப்படுத்தப்படு கிறது.

முள்ளிக்குளம் பகுதியிலும், மன்னார் மாவட்டத்தில் சன்னார் என்ற இடத்திலும் இவ்வாறு கையகப்படுத்தப்பட்டன. போரினால் இடம் பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு தம்மிடம் பணம் இல்லை என்று கை விரிக்கின்ற ராஜபக்ஷ அரசு, இராணு வத்துக்காக கோடிக்கணக்கில் செலவு செய்கிறது. அது இராணுவத்துக்காக செய்யும் செலவில் ஒரு சதவிகிதத்தைக் கூடபோரினால் இடம் பெயர்ந்த வர்களுக்கான நலத்திட்டங்களுக்கு ஒதுக்கவில்லை என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் பலவந்தமான நில அபகரிப்பு நடவடிக்கைகள் பற்றி, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பேராயர் எழுதிய கடி தத்தின் நகல் இதில் பின் இணைப்பாகத் தரப்பட்டிருக் கிறது. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முசாலி பகுதியில் எவ்வாறு தமிழர்களின் நிலம் அபகரிக்கப்படுகிறது என்பதை விரிவாக ஆதாரத்தோடு குறிப்பிடும்பேராயர்,இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ வுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். ஜனாதிபதி ராஜபக்ஷ இந்த அறிக்கையைப் பார்த்து பயந்துவிடுவார்.என எதிர்பார்க்க முடியாது ஆனால், இந்த அறிக்கையில் உள்ள உண்மைகள் தமிழர்கள் அனுபவிக்கும் கொடுமைகளைப் புரிந்துகொள்ள உதவும்.

# 27.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1358 - துப்ரோவ்னிக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1709 - ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் பொல்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ள்ஸ்சின் படைகளை வென்றான்.
- 1801 - கெய்ரோ நகரம் பிரித்தானியப் படையினரிடம் வீழ்ந்தது.
- 1806 - புவனஸ் அயரசை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1896 - ஜப்பான் சன்ரிக்கு என்னுமிடத்தில் நிலநடுக்கம் மற்றும் ஆழிப் பேரலை காரணமாக 27 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1950 - கொரியப் போரில் பங்கு பற்றவென ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை அனுப்ப முடிவு செய்தது.
- 1954 - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1954 - உலகின் முதலாவது அணுக்கரு ஆற்றல் உற்பத்தி மையம் மொஸ்கோவுக்கு அருகில் ஒப்னின்ஸ்க் என்னும் இடத்தில் அமைக்கப் பட்டது.
- 1957 - லூசியானா மற்றும் டெக்சாசில் நிகழ்ந்த சூறாவளியில் 500 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1967 - உலகின் முதலாவது ஏ.ரி.எம் (ATM) லண்டன் என்ஃபீல்டில் அமைக்கப்பட்டது.
- 1977 - சிபூட்டி பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979 - முகமது அலி குத்துச் சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- 1991 - சுலோவீனியா தனது விடுதலையை அறிவித்த இரண்டாம் நாளில் யுகோஸ்லாவியா அதன் மீது படையெடுத்தது.
- 1998 - கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.


### பிறப்புகள்

- 1880 - ஹெலன் கெல்லர் அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (இ.1968)
- 1922 - அகிலன், தமிழில் ஞானபீட விருது பெற்ற முதல் எழுத்தாளர்
- 1927 - டொமினிக் ஜீவா ஈழத்தின் எழுத்தாளர், இதழாசிரியர்

### இறப்புகள்

- 1999 - ஜோர்ஜ் பப்படபவுலஸ், முன்னாள் கிரேக்க அரசுத் தலைவர் (பி.1919)
- 2009 - இ.முருகையன், ஈழத்துக் கவிஞர் (பி.1935)

**2007 - டோனி பிளேயர் பிரதமர் பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து கோர்டன் பிறௌன் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.**



# கற்பனைக்கும் எட்டாத திருப்பங்கள் நிரம்பிய பிரபலங்களின் வாழ்க்கை!



நெருங்கிய நண்பர்கள் கடைசி நேரத்தில் குழி பறித்தது, இறப்பதற்கு 42 மணி நேரங்களுக்கு முன்பு காதலியைத் திருமணம் செய்து கொண்டது எனப்பல சுவாரஸ்யத் திருப்பங்கள் நிறைந்து அடால்ஃப் ஹிட்லரின் வாழ்க்கை.

பலரின் உயிரை கொடூரமாகப் பறித்தவருக்கு அன்பு மனைவியின் உயிர் தன் கண் முன் பிரிவதைக் காணவேண்டிய பரிதாப சூழ்நிலை. ரஷ்யப் படை பேர்லினை நெருங்கிக் கொண்டு இருக்கிறது. நம்பியவர்கள் எல்லாம் கடைசி நிமிடத்தில் கைவிட்டுவிட்டார்கள். இனி போரிட்டு ஜெயிக்க முடியாது! என்பது ஹிட்லருக்குத் புரிகிறது.

தன்னுடன் இருந்த அதிகாரிகளிடம் எங்காவது போய்விடுங்கள் என்று உத்தரவிடுகிறார். காதலி ஈவா ப்ரவுனுடன் தனியறைக்குச் செல்லும் ஹிட்லர் காதலியின் விருப்பத்துக்கு இணங்க அவரைத்திருமணம் செய்து கொள்கிறார். சிறிது நேரத்தில் ரஷ்யப் படைகள் 300 மீற்றர் தூரத்தில் நெருங்கி விட்டன. ஈவா ப்ரவுன் சயனைட் சாப்பிட்டு வாயில் நுரை தள்ளி சுரு ண்டு விழுந்தார். ஹிட்லரோதுப்பாக்கியை வாயில் வைத்து மூளை சிதறும்படி தன்னைத்தானே சுட்டுக்கொண்டு மரணித்தார்.

இவர்கள் மட்டு மல்ல தோட்டக் காரர், சமையல் காரி, கார் ஓட்டுனர் போன்றோர் ஹிட்லரின் இறுதி மூச்சு பிரியும் வரை கூடவே இருந்து கூடவே சேர்ந்து தங்கள் உயிரையும் மாய்த்துக் கொண்டார்கள். வாழ் நாள் முழுக்க கொடூர மான சர்வாதிகாரியாக இருந்த ஹிட்லர் கடைசி நேரத்தில் தற்கொலை முடிவை எடுப்பதற்கு வேறொரு காரணமும் இருந்தது.

ர்ஷயப் படைகள் ஹிட்லர் தங்கியிருந்த நிலவறையை நெருங்குவற்கு முந்தைய நாள் தான் இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினியும் அவரது மனைவியும் அவ்வூர் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களால் சுட்டுக்கொல்லப்பட்டு ஆடைகளை அவிழ்த்து தலைகீழாக தொங்க விடப்பட்டார்கள்.

அவர்களது பிணங்களை பொது மக்கள் கல்லால் அடித்து தங்கள் கோபத்தைத் தீர்த்துக் கொண்டார்கள். தான் ரஷ்யப் படையினரிடம் சிக்கினால்



தனக்கும் இதே கதி தான் என உணர்ந்தால், தற்கொலை முடிவு எடுத்தார் ஹிட்லர். இறுதியில் ரஷ்யப் படைகளால் ஹிட்லரின் சாம்பலை மட்டுமே கைப்பற்ற முடிந்தது!

புகழின் உச்சத்தில் இருந்த போது திடீரென ஒருநாள் ஒரு நடிகையின் வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார் புரூஸ்லி. மரண விசாரணை அறிக்கை தவறான மாத்திரைகளை சாப்பிட்டதால் புரூஸ்லீ மூளை பாதிக்கப்பட்டு இறந்தார் என்று மட்டுமே சொன்னது. இதுவரை காரணம் யாருக்கும் தெரியாது!

பாப் இசைக் கடவுள் மைக்கல் ஜாக்சனின் திருப் பம் சமீபத்திய மாபெரும் அதிர் ச்சி. இவர் இறப்புப் பற்றிய விசாரணையில் வலி நிவாரணிகளை அதிகம் சாப்பிட்டதால் இறந்தார் என்று மருத்துவர்கள் சொன்னாலும், ஜாக்சனின் ரசிகர் 'மரணத்தில் மர்மம்' என்றே சொல்லி வருகின்றனர்.

தியாகராஜ பாகவதர்... தமிழ்த்திரை உலகின் முதல் சுப்பர் ஸ்டார். ஒருமுறை கச்சேரிக்குச் சென்ற பாகவதர் அன்று வசூலான ஆயிரக்கணக்கான ரூபாய் பணத்தை ரயிலில் வரும்போது எண்ணிக்கொண்டே வந்தார். அவற்றைச் சரியாக ஜிப்பாவுக்குள் வைக்காததால் கழிப்பறைக்குப் போகும் போது உள்ளே விழுந்துவிட்டது.

'இதைப்போய் எடுப்பதா' என்று அவ்வளவு பணத்தையும் அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டார் பாகவதர். ரயிலில் இருந்து இறங்கியதும் தெரிந்த ஒருவரிடம் கைச் செலவுக்கு 50 ரூபாய் வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார். பின்னர், அந்த 50 ரூபாய் பணத்தை பலஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு நகைப் பெட்டியில் வைத்து திருப்பிக் கொடுத்தார். இப்படி செல்வச் செழிப்போடு வாழ்ந்த பாகவதர் லட்சுமிகாந்தன் கொலை வழக்குக்குப் பின், சொத்துக்களை இழந்து கண்பார்வை இழந்து, கடும் வறுமையில் வாடினார். பசிபோக்க, ஒருகோயில் வாசலில் துண்டேந்திப் பாடிய பாகவதர், இறுதிக் காலத்தில் ஒரு பிச்சைக்காரரைப் போல இறந்தார்.

புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் ரேடியம் என்னும் பொருளை கண்டுபிடிப்பதற்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த மேரி கியூரியின் கடைசிக்கால வாழ்க்கை மிகக் கொடுமையானது.

போலந்து நாட்டில் 1867 இல் பிறந்த



இவர், அந்த நாட்டில் இருந்த கடுமையான கலாசாரக் கட்டுப்பாடுகளையும் மீறி அறிவியலின் மீது கொண்ட ஆர்வத்தால் பாரிஸிற்கு வந்தார். பட்டப் படிப்பை முடித்த பின்னர், தனது கணவருடன் பேரியம், பிஸ்மத் போன்றவற்றைக் கொண்டு ஆராய்ச்சி நடத்திக் கொண்டு இருக்கும்போது தான் யுரேனியத்தைவிட பல மடங்கு சக்தி வாய்ந்த ரேடியம் என்ற பொருளைக் கண்டறிந்தார். அதற்காக 1903 இல் இருவருக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

மேரிமற்றும் அவருடைய கணவரான பியரி கியூரி இருவரும்



ஆய்வகங்களில் வேலை செய்தாலும் முதலில் கதிர் வீச்சு தாக்குதலால் பாதிக்கப்பட்டது பியரி தான். கால் வலியாலும், உடல்நடுக்கத்தாலும் மிகவும் பாதிக் கப்பட்ட அவர் 1906 இல் குதிரை வண்டியில் செல்லும்போது அதிலிருந்து விழுந்து



இறந்து போனார்.

இரண்டு பெண்குழந்தைகளைக் கவனித்துக்கொண்டே பல பல்கலைக்கழகங்களில் பாடம் எடுத்து வந்தார் கியூரி. மிகவும் ஆபத்து மிகுந்த ரேடியம் சால்ட் என்னும் பொருளை மாணவர்களுக்கு காண்பிப்பதற்காக எப்போதும் அதைத் தன் பொக்கெற்றில் வைத்திருப்பார்.

சோதனைகளுக்காக தன்னையே பயன்படுத்திக்கொண்டவருக்கு லுக்கிமியா என்னும் தோல் புற்றுநோய் வந்துவிட்டது. அதையும் தாண்டி, தொடர்ந்து தன் உடலை கண்டுபிடிப்புகளுக்கான சோதனைக் களமாகவே பயன்படுத்தினார்.

அவரது வாழ்க்கையில் இறுதிக் கட்டம் மிகுந்த வலிகளும், வேதனைகளும் நிறைந்தது. புற்றுநோய்க் கட்டிகளால் கடும் பாதிப் புகளுக்கு உள்ளான கியூரி, 1934 இல் இறந்துபோனார். 1935 இல் அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்ட போது, அதைக் காண்பதற்கு கியூரி இல்லை.

ஆனாலும், அவரது கண்டுபிடிப்புத் தான் இன்று பல கோடி மக்களின் வலிக்கு நிவாரணம் அளித்துக்கொண்டு இருக்கிறது!



சதாம் ஹுசைன்... அமெரிக்காவை மூர்க்கமாக எதிர்த்த அதேநேரத்தில் சொந்த நாட்டு மக்களையும் வதைத்த சர்வாதிகாரி. அத்தனை ஆர்ப்பாட்டமாக, ஆடம்பரமாக ஆட்சி செய்த சதாம் தனது இறுதி நாட்களில் மிகக் குறுகலான ஒரு பதுங்கு குழியில் தனது நாட்களை கழிக்க வேண்டிய நிலை. முறையான விசாரணைகளுக்கு முன்னரே தூக்கில் தொங்கவிடப்பட்டார் சதாம்!






## துளிகள்...

◆ சிவாஜி இறப்பதாக முடியும் " வசந்த மாளிகை' படம் முதலில் ஓடவில்லை. பின்பு, இன்னும் சிறிது நேரம் லேட் ஆகியிருந்தாலும் செத்திருப்பார் என்று டாக்டர் சொல்வதாக எடுத்து, சிவாஜி பிழைப்பதாக திருப்பமாக மாற்ற... படம் சுப்பர் ஹிட்!

◆ ஒரு படத்தின் முடிவு, அந்தப் படத்தை முடிவே இல்லாமல் திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது என்றால் நம்பமுடிகிறதா? அமெரிக்காவில் உள்ள தியேட்டர் ஒன்றில் 1975 இலிருந்து ஓடிக்கொண்டிருக்கிறது ராக்கி என்ற பேய்ப்படம். மனிதனை பேய்கள் எவ்வாறு எல்லாம் கொடுமைப்படுத்துகின்றன என்பதுதான் கதை. உறைய வைக்கும் க்ளைமாக்ஸால் இப்போதும் நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கிறது.

◆ இந்தியாவிலும் அப்படி ஒரு படம் உண்டு. ஷாரூக், கஜோல் நடித்த 'தில் வாலே துல் ஹனியா லே ஜாயாங்கே" படம்,1995 ம் ஆண்டு, ஒக்டோபர் 20 இல் ரிலீஸ் ஆனது. பிரிந்துவிட்ட ஷாரூக்கும் கஜோலும் ரயில்வே ஸ்டேஷனில் இணைகிற திருப்பம், அப்போது அத்தனை ரசிகர்களை கலங்கி அழவைத்தது. அன்று வெளிவந்த அந்தப் படம் இன்றுவரை மும்பையில் உள்ள மராட்டா மந்திர் என்கிற தியேட்டரில் ஒரு ஷோவாக ஓ... ஓடிக் கொண்டே இருக்கிறது!

◆ பிரதி மாதம் தொடர்ந்து பணம் கட்டுங்கள், உங்களுக்கு அழகான வீடு கொடுப்போம் என்று ஒரு பெரிய நிறுவனம் அறிவித்ததைக் கேட்டு, அமெரிக்க மக்கள் கேள்வி எதுவும் கேட்காமல் கண்ணைக் கட்டிக்கொண்டு பணம் கட்டினார்கள். ஏப்ரல் 1ஆம் திகதி பணம் கட்டியவர்களுக்கு ஒரு பிளாஸ்டிக் பொம்மை வீட்டை கூரியரில் அனுப்பிவைத்தது அந்த நிறுவனம். இதை எதிர்த்து நீதிமன்றம் சென்ற மக்களிடம், அவர்கள் சொன்னதைத்தான் செய்துவிட்டார்களே என்று சொல்லி வழக்கை தள்ளுபடி செய்தது நீதித்துறை. ஒவ்வொருவரும் கட்டிய பணம் இலங்கை மதிப்பில் 10 இலட்சத்துக்கும் மேல்!

◆ யாருக்கும், தான் இறக்கும் திருப்பமான நாள் தெரியாது. ஆனால், அதற்கும் நாள் குறித்துவிடுகிறது.' டெத் வெப்சைட்' எனப்படும் இணையத்தளங்கள். நமது உடல் எடை, உயரம், வாழும் நாடு, புகை, மதுப்பழக்கம் ,வயது எனப் பல கேள்விகள் கேட்கிறார்கள். பூர்த்திசெய்தால், நீங்கள் இந்த வருடம் இந்தத் திகதியில் அவுட் என்று தகவல் சொல்கிறார்கள்.

# இலங்கை உள்விவகாரங்களில் சர்வதேச அமைப்புகள் தலையிடுவதை ஏற்கமுடியாது

## சஜித் பிரேமதாச எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றை ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு அரசாங்கம் வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் இன்னமும் இலங்கையை தங்களது காலனித்துவ நாடாக கருதி செயற்படக் கூடாது எனவும் சுயாதீனமானதும் இறைமையுடையதுமான நாடொன்றின் உள்விவகாரங்களில் எந்தவொரு சர்வதேச அமைப்பும் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்ட அவர், ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டத்தை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கடுமையான நிபந்தனைகளை விதிக்கக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மனித உரிமை மற்றும் அரசியல் விவகாரங்களில் அரசாங்கம் கூடுதல்கவனம் செலுத்தியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து இலங்கை மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தினால் எவராலும் நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது எனவும், சலுகைத் திட்டம் நீடிக்கப்படாவிட்டால் அதனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் குறிப்பாக கிராமப் புற இளைஞர், யுவதிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் 1968, 1971 ,1989 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றதனைப் போன்ற கிளர்ச்சி இடம்பெற இது வழிகோலும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நிபுணர்கள் குழு நியமனத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி நலத்திட்டங்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு முன்னெடுத்திருக்கலாம் எனவும் நிபுணர்கள் குழுவிற்கு செலவழிக்கப்படும் பணத்தை வடக்கு, கிழக்கு இடம்பெயர் மக்களின் நலனுக்காக செலவிட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



## பதினொராம் திருவிழா

### ஒளிமிகு உலகம் எப்போது

கனவு காணும் உலகினால்
நனவு எல்லாம் அழிகிறது
பணிவு கண்டு தொழுகிறோம் – எனை
நோக்காது நீயும் போகிறாய்

வீடிழந்து, சொந்தபந்தமிழந்தோம்
தாய் மண்விட்டிழந்து தரணியிழந்தோம்
இணுவையில் வாழும் கதிர்வேலா
இருளில் வாழ்வது தெரியலையா?

நடக்கும் இடமெல்லாம் விபத்துக்கள்
நாளும் சிதறி போகிறேன்
மரணவாயில் காண்கிறேன்
மனமிரங்கும் குணம் உனக்கில்லையோ !

கற்ற கல்வி புரியவில்லை
விதியும் என்னை விடவில்லை
தொட்டதெல்லாம் விளங்கவில்லை
ஆறுமுக கடவுளே அருளாயோ!

வே.வே.அகிலேஸ்வரன்

### "மயில் ஏறி வந்து இரட்சிப்பாயே"

சூர்மார்பும் குன்றும் ஒன்றாகத் துளையிட்ட
உன் கூர் வேலுக்காகாதோ
கொடுமை மிகு கொலை கொள்ளையிவை
கூண்டோடு தொலைக்க
யார் மேலும் பிழையில்லை நாம் செய்த
வினைப் பயனன்றோ
உலகப் பெருமஞ்சம் உருளும் வீதியில்
உருண்டு புரள்கின்றோம்
கார்மேவும் களனிகளில் கரும்பினொடு கதிலியினம்
நனிந்து பாயும்
சோலைகள் சூழ் இணையில்லாயூர் நின்று
லவும் செவ்வேளே !
பார்மேலோர் நாடின்றி, ஊரின்றி,
வீடுமின்றி அகதியானோம்
பார்த்திருக்கலாகுமோ பச்சைமயில் ஏறி
வந்து இரட்சிப்பாயே

மாவை மணி

(1709)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தொடர்பில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுமா?

## ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி பதில்



(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுவை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் தாம் பேச்சுக்களை நடத்தப் போவதில்லை என இலங்கை அரசு தெரிவித்துள்ளபோதும், அரசு விரும்பினால் பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பிரசல்ஸ் பகுதியைத் தளமாகக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடகத்துறை அதிகாரி மாரி அன்ரேனி கேவின் இது தொடர்பில் மேலும்தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசின் கருத்துக்களை நாம் ஊடகங்கள் ஊடாகவே அறிந்துள்ளோம். அவர்கள் எமக்கு உத்தியோகபூர்வ அறிவித்தல்களை வழங்கவில்லை. எனவே அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் இலங்கை அரசு விரும்பினால் நாம் அவர்களுடன் கலந்துரையாட தயாராகவுள்ளோம்.

இலங்கையில் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துதல், மீள்கட்டுமானம், புனரமைப்பு ஆகிய பணிகளில் உதவிகளை மேற்கொள்ள நாம் தயாராக உள்ளோம். இலங்கை அரசு விரும்பினால் எம்முடன் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். நாட்டில் அனைத்துலக தராதரத்திற்கு இணையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வரிச்சலுகையை எதிர்காலத்தில் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்ட விசாரணைகளில் காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை அரசின் உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது நாம் வலியுறுத்தியிருந்தோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக இலங்கை அரசு ஜூலை முதலாம் திகதிக்கு முன்பு எழுத்தில் பதில் தரவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் துணைத்தலைவர் கதிரின் அஸ்ரன் மற்றும் ஆணையாளர் டி குசாட் ஆகியோர் இலங்கை அரசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# வடக்கு-கிழக்கில் புலனாய்வுப் பிரிவினரை அதிகரிக்குமாறு கோத்தபாய உத்தரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்புக்காக புலனாய்வுப் பிரிவினரின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்தப் பிரதேசங்களில் மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகள் ஏற்படாமல் தடுப்பதற்காக பாதுகாப்பு செயலாளர் இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப் பிரதேசங்களில் தொடர்ந்தும் ஏதேனும் குழுக்கள் செயற்பட்டால் அவற்றின் பெயர்கள், அவற்றின் செயற்பாடுகளை கண்டறிதல், காடுகளில் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் இடம் பெறுகிறதா என்பதைக் கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்தல் போன்ற முக்கிய பணிகளை புலனாய்வுக் குழுக்களுக்கு வழங்குமாறும் அவர் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் ஆயுத விநியோக மார்க்கங்களாக பயன்படுத்திய கடல் பகுதிகள் மற்றும் பாதைகளை தொடர்ந்தும் உன்னிப்பாக கண்காணிக்குமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (6)

# உலகின் மிகப்பெரிய பௌத்த விஹாரை

(கொழும்பு)

உலகின் மிகப் பெரியதும் அதிகூடிய உயரமுடையதுமான பௌத்த விஹாரை அம்பாறையில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்த விஹாரை அமைப்பதற்காக 32 ஆயிரத்து 500 இலட்ச ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வரலாற்று சிறப்பு மிக்க தீகவாபி விஹாரையை மையமாகக் கொண்டு இந்த விஹாரை அமைக்கப்படவுள்ளது.

இந்த விஹாரை நிர்மாணப் பணிகளுக்கு நான்கு இலட்சம் சீமெந்து மூடைகளும் 7ஆயிரத்து 500 தொன் இரும்புக் கம்பிகளும் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (6)

# சிகிரியா புனரமைப்பு பணிகளை இடைநிறுத்துமாறு உத்தரவு

(கொழும்பு)

சிகிரியாக் குன்று வளாகத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்துப் புனரமைப்புப் பணிகளையும் உடனடியாக இடைநிறுத்துமாறு தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

சிகிரியாக் குன்று வளாகத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளுக்குப் பிரதேச வாசிகளிடமிருந்து எழுந்துள்ள எதிர்ப்பையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தொல் பொருள் ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெனரல் செனரத் திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அண்மையில் மூவர் சிகிரியாக் குன்றின் அடிவாரத்தில் உண்ணாவிரதப் போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தபோது, சிகிரியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் , உயர்கல்வி பிரதியமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க மற்றும் தொல்பொருள் ஆய்வுத்திணைக்களத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் சிகிரியா குன்றுப் பகுதிக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

திரை விமர்சனம்

# துரோகம்



பிஞ்சிலேயே பழுத்த ஒருவனால் நஞ்சாகிப்போகும் ஒரு குடும்பப் பெண்ணின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளது துரோகம். நடந்தது என்ன?

கதைப்படி அம்மாவை இழந்து அப்பா செல்லமாக வளரும் வசதியான வீட்டுப் பிள்ளை, அந்த வீட்டுத் தாதிப் பெண்ணுடன் சல்லாபம் கொள்கிறேன். அது போதாதென்று தன் வீட்டிற்கு அருகில் குடிவரும் பொலிஸ் அதிகாரியின் பெண்டாட்டியையும் கரண்டைக் கட் பண்ணி விட்டு அவளது கணவன் போலவே கட்டிப்பிடித்து சல்லாபம் கொள்கிறான்.

அதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதைத் தனது மொபைல் போனில் பதிவு செய்து வைத்துக் கொண்டு அவளை அடிக்கடி சல்லாபத்திற்கு அழைக்கிறான். பொலிஸ் அதிகாரியின் மனைவி புருஷனிடம் போட்டுக் கொடுத்தாளா அல்லது அந்த காமுகனின் இச்சைக்குத் தொடர்ந்து உடன் பட்டாளா? என்பதை வித்தியாசமும் விறுவிறுப்புமாக சொல்கிறது துரோகம் படத்தின் மீதிக்கதை!



கிஷோர், சதீஷ், லீனா, சுவாதி, டெல்லி கணேஷ், ரம்யாசென், கிருஷ்ணன், அம்பிகா உள்ளிட்ட அனைவரும் தங்கள் பங்கைச் சரியாகச் செய்திருக்கின்றனர். டெல்லிகணேஷ் மட்டுமே தெரிந்த முகம் என்றாலும் லீனா, சுவாதி ஆகியோரின் நடிப்பும், இளமைத் துடிப்பும் நம்மைப் படத்தோடு ஒன்றிப் போகச் செய்கிறது.


அதேநேரம் கதையின் திருப்புமுனையாக அமையும் அந்தக் கரண்ட் கட் காம களியாட்ட நிகழ்வில் கணவனின் கைக்கும் அடுத்தவனின் ஸ்பரிசத்திற்கும் வித்தியாசம் தெரியாமலா ஒரு பெண் இருப்பாள்? எனும் சந்தேகம் எழுவதையும் இருட்டில் லைட் வெளிச்சம் இல்லாத சூழலில் செல்போனில் இவர்களது சரசம் பதிவு செய்யப்படுவதையும் தவிர்த்து நம்பும் படி இக்காட்சிகளைப் படமாக்கியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் எனும் எண்ணம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

மணிஷின் இசையும் மகேஷ்வரனின் ஒளிப்பதிவும் எச். சமீரின் எழுத்திற்கும் இயக்கத்திற்கும் மேலும் அழகு சேர்க்கின்றன என்றால் மிகையல்ல. திரையரங்கிற்கு வருபவர்களை மனதில் கொண்டு செக்ஸ் பார்முலாவில் படமாகியிருக்கும் துரோகம் சக்ஸஸ்புல் படமாகி இருப்பதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றுமில்லை.

துரோகம்:வசூலும் அபாரம்

# மீண்டும் தனுஷூடன் ஜோடி சேர்கிறார் தமன்னா

ரைடக்டர் ஹரியின் புதிய படத்தில் தனுஷூடன் மீண்டும் ஜோடி சேர்ந்து நடிக்க உள்ளார் தமன்னா. இந்தப் படத்திற்கு ஹரி, 'அருவா' எனப் பெயரிட்டுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ளன.



இந்தப் படத்திற்கு பிரியன் ஒளிப்பதிவு செய்ய உள்ளார். தனுஷின் இமேஜை உயர்த்தும் அக்ஷன் படமாக 'அருவா' படத்தை உருவாக்க ஹரி திட்டமிட்டுள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் ராஜ்கிரண் நடிக்கவுள்ளார்.

'அருவா' படத்திற்கான பாடல்களுக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசை அமைக்கவுள்ளார்.

# தமிழில் மீண்டும் படமாகிறது கோகுலம்

ஆக்ஷன் கிங் அர்ஜூன், பானுபிரியா, ஜெயராம் ஆகியோர் நடித்து சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த கோகுலம் படம் மீண்டும் அதே பெயரில் தயாரிக்கப்படவுள்ளது. இந்தப் படத்தின் மிக முக்கிய கதாபத்திரத்தில் பத்மபிரியா நடிக்கவுள்ளார். தமிழில் கோகுலம் என்ற பெயரில் உருவான படம் "அந்தரி பந்துவைய்யா" என்ற பெயரில் சமீபத்தில் தெலுங்கு மொழியில் ரீமேக்செய்யப்பட்டு வெளியிடப் பட்டது.




இந்தப் படத்தின்முக்கிய கதாபாத்திரத்தில் காதல்னா சும்மா இல்ல படத்தில் நடித்த சர்வானந்த் நடித்துள்ளார். இந்தப் படத்தை சந்திர சித்தார்த் இயக்கி உள்ளார். தற்போது தமிழில் தயாரிக்கப்படவுள்ள கோகுலம் படத்தை நயீம் மற்றும் ராமகிருஷ்ணன் தயாரிக்கின்றனர்.

இரண்டு மாறுபட்ட பழக்கவழக்கங்களைக் கொண்ட ஒரு ஜோடியின் வாழ்க்கை முறையை மையமாகக் கொண்டுஇந்தப் படம் உருவாக்கப்படவுள்ளது. சில காரணங்களால் கிராமத்து வாழ்க்கைக்கு செல்லும் அவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் தான் புதுப்பொலிவுடன் உருவாகும் கோகுலத்தின் கதை. இந்தப் படத்திற்கு அன்பு ரூபென் இசையமைக்க உள்ளார்.

# புன்னகைக்கு பூட்டு



புரட்சி நாயகி என்ற பட்டத்தை சினேகாவுக்கு சூட்டியிருக்கிறார்கள். பவானி படத்தில் பொலிஸ் அதிகாரியாக சண்டைக் காட்சிகளில் நடித்திருப்பதால் இந்த பட்டமாம். புன்னகை இளவரசி, புரட்சி நாயகி இரண்டுமே நானே சூட்டிக் கொண்டதல்ல. நான் சினேகாவாகவே இருக்க விரும்புகிறேன். ஹோம்லியான கேரக்டரரில் நடித்துக் கொண்டிருந்தேன். என்னை பவானியில் ஆக்ஷன் ஹீரோயினாக நடிக்கவைத்திருக்கிறார் இயக்குநர் கிச்சா.

மற்றவர்கள் முடியாது என நினைத்த வேடத்தில் நடிக்க ஆசைப்பட்டேன். அதனால் இதில் நடித்தேன். புன்னகைக்கு பூட்டு போட்டுவிட்டு நடித்திருக்கிறேன். இடையிடையே இப்படிப்பட்ட வித்தியாசமான முயற்சிகளை தொடர்வேன் என்றார் சினேகா.




# புது ஸ்டைல் சிம்பு



விக்னேஷ் சிவா இயக்கத்தில் சிம்பு, சரத்குமார் மகள் வரலட்சுமி நடிக் கும் படம் போடா போடி. முக்கிய காட்சி கள் லண்டனில் படமாகின்றன. மென்மையான காதல் கதையாம். இதற்காக புதுஹெயார் ஸ்டைலுடன் தோன்றுகிறார் சிம்பு. "விண்ணைத் தாண்டி வருவாயா படத்தில் இருந்த ஸ்டைலுக்கும் இதற்கும் நிறைய வித்தியாசங்கள் காட்டுகிறாரராம்.

இப்படத் தின் ஷூட்டிங் முடிந்த பின், லிங்குசாமி இயக்கும் படத்தில் நடிக்கிறார் சிம்பு.

# 13 புதுமுகாங்கள் அறிமுகமாகும் நாங்க



அமராவதி, கர்ணா, நான் அவன் இல்லை உட்பட 24 படங்களை இயக்கி இருப்பவர் செல்வா. இவர் இயக்கும் 25 ஆவது படம் நாங்க. சினிமா கொட்டகை என்ற நிறுவனம் தயாரிக்கிறது.

தெலுங்கு இசை அமைப்பாளர் வசுராவின் மகன் முனிஷ், நடிகர் தயாளனின் மகன் நிவாஸ், தயாரிப்பு நிர்வாகி குருசாமியின் மகன் விவேக், அருண், எல். எம். எம். தயாரிப்பாளர்களில் ஒருவரான வி. சுவாமிநாதன் , மகன் அஸ்வின், நடிகர் சந்தான பாரதியின் மகன் சஞ்சய் உட்பட சினிமா தொடர்பானவர்களின் மகன்கள் ஹீரோக்களாக நடிக்கின்றனர்.

இதில், பாடகர் மனோ மகன் சாஹிர் வில்லனாக அறிமுகமாகிறார். மேலும் அரசி, விஷ்ணுப்ரியா, ஷிவானி, வைதேகி ஹீரோயின்களாக நடிக்கின்றனர். மொத்தம் 13 புதுமுகங்கள் அறிமுகமாகின்றனர். கஸ்தூரி முக்கிய வேடத்தில் நடிக்கிறார். பாலபாரதி இசை. பாடல்கள் பா. விஜய். அண்ணாமலை. ஒளிப்பதிவு பாலமுருகன், இதன் படப்பிடிப்பு கடந்த 18 ஆம் திகதி முதல், தென்காசியில் நடந்து வருகிறது.

மனிதனுக்கு வரும் துன்பங்கள் எல்லாம் அவன் நாவிலிருந்து வருகின்றன.
~ அரேபியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஒன்றுபட்டு வாருங்கள் வடம் பிடிப்போம் தமிழர் துயர் துடைப்போம்

தமிழ்க் கட்சிகள் ஒன்று கூடியுள்ளமை, தமிழ் மக்களின் மனங்களை நெகிழவைத்துள்ளது.

எங்களுக்கு நாங்களே பகை என்ற உணர்வில் இருந்து விடுபட முடியாமல் தத்தளித்த வேளையில், தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்துள்ளமை தமிழ் மக்களின் அவலநிலையை அவை புரிந்து கொண்டு விட்டன என்பதைச் சுட்டி நிற்கின்றது.

இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியும் தமிழ்க் கட்சிகளின் சந்திப்பில் இடம் பெறவில்லை என்பது கவலை தருகிறது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியும் தமிழ்க் கட்சிகளின் சந்திப்பில் இணைந்து கொள்ள வேண்டும்.

உங்கள் பகைகளை ஓரங்கட்டி விடுங்கள். தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிச் சிந்தியுங்கள்.

சமகால சூழ்நிலையில் தமிழ் மக்களின் இருப்புக்கான ஆபத்துக்களை உணர்ந்து கொள்ளுங்கள்.

தமிழ்க் கட்சிகளின் சந்திப்பு அல்லது தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவென்பது, இன்னொரு தமிழ்க் கட்சியை வீழ்த்துவதாகவோ அல்லது இன்னொரு தமிழனுக்கு துரோகப்பட்டம் சூட்டுவதற்கானதாகவோ இருக்க வேண்டாம்.

மாறாக, எங்கள் கரங்கள் ஒன்றுபடுவது கண்ணீரில் மிதக்கின்ற தமிழனத்தை தூக்கி கரையேற்றுவதற்கானதாக இருக்கட்டும்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுவதில் இருக்கக் கூடிய நடைமுறைச் சாத்தியங்கள் அத்தனையும் மனம் சார்ந்த விடயம்.

எனவே விட்டுக்கொடுப்புகள், புரிந்துணர்வுகள், கருத்துப்பரிமாற்றங்கள் ஊடாக கருத்து வேற்றுமைகளை உடைத்தெறியமுடியும்.

அதேநேரம், தமிழ்க்கட்சிகள் ஒன்றுபடும் நேரத்தில் எவரும் சீற்றம் கொண்டு சினந்து கடும் வார்த்தைகளை கொட்டி அதை ஊடகங்களுக்குக்கொடுத்து அவை அவற்றை ஊதி பெருப்பித்து அவியலாய் படைத்தால் எல்லாம் கெட்டுப்போய் விடும்.

ஆக, நாவடக்கத்துடன் புத்திசாலித்தனமாக ஒன்று சேருங்கள்.

உங்கள் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கவும் முயற்சிகள் நடக்கும்.

இந்த முயற்சிகள் உங்களுக்குள் இருப்பவர்கள் மூலமும் நடக்கலாம்.

விழிப்பாக இருங்கள். திடமாக இருங்கள். சிறுபான்மை தமிழ்இனம் ஒன்றுபடுவதன் மூலம் பலம் பொருந்தியதென்பதை நிரூபியுங்கள். நாங்களே எங்களில் நம்பியிருப்போம்.

# குடாநாட்டில் கலாசாரத்தை சீரழிப்போர் உடனடியாக கைது செய்யப்படுவர்

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் கலாசாரத்தை சீரழிக்கும் முறையில், மதுபானம் அருந்தி வீதியில் நடமாடுபவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

தற்போது மதுபாவனையாளர்களின் எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரித்துள்ளது. இதனால் சமூக கலாசார சீரழிவுகள் அதிகமாக குடாநாட்டில் அரங்கேறி வருகிறது. யாழ்ப்பாணத்தில் புனித இடங்களாக விளங்கும் ஆலயங்கள், புத்த விகாரைகள் ஆகியவை மதுபானப் பிரியர்களின் அடாவடித்தனத்தினால் ஆலயச்சூழல்களை அசுத்தப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் மற்றும் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனைத் தடுக்கும் முகமாக, இந்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை குடாநாட்டில் சிறுவர்களை பிச்சையெடுப்பதற்காக பயன்படுத்தும் பெற்றோர்கள், குழந்தைகளுடன் சேர்ந்து ஆலயச்சூழல்கள், கடையோரங்கள், தெருக்களில் பிச்சையெடுப்பவர்களை உடனடியாகக் கைது செய்து சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் சேர்க்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ தெரிவித்துள்ளார். (6-7)

# இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அ.தி.மு.க ஆர்ப்பாட்டம்

## ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பெங்களூரில் அதிமுக சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் போர் முடிந்து ஓர் ஆண்டிற்கும் மேலாகி விட்டது. இருப்பினும் இடம்பெயர்ந்த தமிழர்களை தங்களுடைய சொந்த இடங்களுக்கு இன்னமும் அனுப்பப்படவில்லை. இலங்கைத் தமிழர்கள் அனைவரும் தங்களுடைய சொந்த நாட்டிலேயே இராணுவ முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் அந்நாட்டு அரசு எடுக்கவில்லை. எடுப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்குப் பதிலாக தமிழர் வாழ் பகுதியான வட இலங்கையில் தமிழர்களின் அடையாளங்களை அழிக்கும் நடவடிக்கையில் அந்நாட்டு ராணுவம் ஈடுபட்டு வருவதாகவும் தமிழர்களின் பண்பாடு, சமயம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் தமிழில் இருந்த சாலைகளுக்கு சிங்களப் பெயர்கள் வைக்கப்படுவதாகவும் இதன் மூலம் அங்குள்ள நிலங்கள் எல்லாம் சிங்கள நிலங்கள் என்று திரித்துக் கூற முயற்சி நடப்பதாகவும் போரின் போது சிதைந்து போன தமிழர்களின் கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல் ஆகியவற்றை கட்டித் தர நடவடிக்கை எடுக்காமல் புத்த விகாரைகள் புதிது புதிதாக கட்டப்படுவதாகவும் தகவல்கள் வருகின்றன. மொத்தத்தில் தமிழ்ப் பகுதிகள் சிங்கள மயமாக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இடம்பெயர்ந்துள்ள தமிழர்களை அவர்களுடைய சொந்த இடங்களுக்கு இலங்கை அரசு அனுப்பி வைக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? அப்படியே அனுப்பினாலும் அங்கு சென்று அவர்களால் நிம்மதியாக வாழ முடியுமா? இந்த நிலைமையில் தமிழர்களின் மறுவாழ்விற்காக 1500 கோடி ரூபாய் நிதி உதவியை மத்திய அரசு அளித்திருக்கின்றது. வெறும் நிதி உதவியை சிங்கள அரசிடம் அளித்ததன் காரணமாக அங்குள்ள தமிழர்களுக்கு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசால் கொடுக்கப்பட்ட ரூ.1500 கோடி இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதை இந்திய அரசு கண்காணிக்க வேண்டும். தமிழ்ப் பகுதிகள் எல்லாம் சிங்கள மயமாக்கப்படுவதாக செய்திகள் வருவது குறித்து ஆராய்ந்து அதில் உண்மை இருக்கும் பட்சத்தில் அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் முக்கிய கோரிக்கைகளான மறுவாழ்வு, விவசாய நிலங்களை சீரமைத்தல், நீர் ஆதாரங்களை சீரமைத்தல், கல்வி நிறுவனங்களை சீரமைத்தல், வழிபாட்டுத் தலங்களை கட்டி எழுப்புதல் அனைத்து நிவாரண உதவிகளும் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை சென்றடையும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பணியில் அமர்த்துதல், பத்திரிகையாளர்களை அனுமதித்தல் போன்ற பணிகளை இலங்கை அரசு மேற்கொள்கிறதா என்பதை இந்திய அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். இவற்றையெல்லாம் இந்திய அரசு மேற்கொள்ள மத்திய அரசை முதலமைச்சர் கருணாநிதி வற்புறுத்த வேண்டும்.

இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற செயலை ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளும் கண்டித்துள்ளன. எனவே சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வில் கவனம் செலுத்தாத தி.மு.க. அரசைக் கண்டித்து அதிமுக கர்நாடக மாநிலக் கிளை இன்று பெங்களூரில் எம்.ஜி. ரோடு, மகாத்மா காந்தி சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் கழக தேர்தல் பிரிவு இணைச் செயலாளர் நா.பாலகங்காத எம்.பி. தலை மையிலும் கர்நாடக மாநில அதிமுக செயலாளர் வா.புகழேந்தி முன்னிலையிலும் நடைபெறும் என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (6)

# இயேசுவின் சீடத்துவம் இலாபமா? நட்டமா?



தக்கவழியில் பிறர்க்குக் கொடுக்கும் அளவு அறிந்து கொடுக்கவேண்டும்; அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும்.

ஆம், இவ்வுலகின் மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் இலாப நட்டம் பார்ப்பது இயல்பு. அது தர்மமே என்றாலும் தனக்கு அதனால் என்ன பலன் கிடைக்கும் என்று தான் மனிதர்கள் செய்கிறார்கள்.

அப்படியென்றால், இன்று உலகமே இலாப நட்டக் கணக்கில் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்று இயேசுவைப் பின்பற்றும் சீடத்துவ வாழ்வும் இப்படிப்பட்டது தானா? அல்லது அதில் வித்தியாசம் உண்டா? என்றால் இன்றைய நற்செய்தி அதற்கு சரியான விடை அளிக்கின்றது.

## பரமபிதா காட்டிய பாதை

ஆம், இன்றைய நற்செய்தி சீடத்துவ தகுதிகளை மூன்று நிலைகளில் நமக்கு படம் பிடித்துக் காட்டுகின்றது.

முதலாவது எதிர்பார்ப்பு இல்லாத சீடத்துவம், இன்று ஒவ்வொரு செயலுக்குப் பின்னும் ஒரு சில எதிர்ப்பார்ப்புகள் உண்டு. இயேசுவினால் அழைக்கப்பட்ட சீடர்களும் திருத்தூதர்களும் எதிர்பார்ப்புடன் அவரைப் பின்பற்றி வாழ்ந்தார்கள். பேதுரு இயேசுவிடம் நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே; எங்களுக்கு என்ன கிடைக்கும்? (மத் 19:276) என்றார்.

இந்துமத புனித நூலாகிய பகவத்கீதையிலே அழகாக கூறப்பட்டிருக்கிறது. கடமை யைச் செய் பலனை எதிர் பாராதே (NISH KAMAK ARMA) இதுதான் உண்மை யான சீடத்துவ வாழ்வு.

இரண்டாவது நிபந்தனை இல்லா சீடத்துவம். இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் எந்த நிபந்தனையுமின்றித்தான் வர வேண்டும். இங்கு இயேசுவைப் பின்பற்றி வந்தவன் இயேசுவிடம் நிபந்தனை விதிக்கின்றான். முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்துவிட்டு வர அனுமதியும் என்றார். அதற்கு இயேசு, இறந்தோ ரைப் பற்றி கவலை வேண் டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள். நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும் என்றார்.

மூன்றாவது நிலையான சீடத்துவம் இயேசுவைப் பின்பற்ற விரும்பியவன் முதலில் தன் வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்றுவர உத்தரவு கேட்கிறான். அதற்கு இயேசு, "கலப்பையில் கை வைத்த பின் திருப்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்கிறார்.

ஆம், இன்று நாம் செய்யும் ஒவ்வொரு தர்ம செயலுக்குப் பின்னும் ஒருசில எதிர்பார்ப்புகளை வைத்திருக்கின்றோம். ஆனால், இயேசுவின் சீடனாய் வாழ்வதற்கு எந்த ஒரு எதிர்ப் பார்ப்போ, நிபந்தனையோ இருக்கக்கூடாது. அது பலனை எதிர்பார்க்காத பணி வாழ்வாக இருக்க வேண்டும்.

ஜோன் ரோபேர்ட்


ஒரு மாத
நிரந்தர வைப்பிற்கு
அதி கூடிய வட்டி
எம்மிடமிருந்து
மேலதிக விபரங்கள்
சம்பத் வங்கியிலிருந்து
ஜுன் 30 வரை மாத்திரமே
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Sampath Bank PLC Fitch Ratings AA-(lka)
சம்பத் வங்கி
SampathBank


acer
Empowering People
intel Core i3 inside
சுறுசுறுப்பான வாழ்க்கையை
acer உங்களை இலகுவாக்கும்
acer Aspire 4741
மிகப்பிந்திய தொழில் நுட்பத்துடன் கூடிய acer core i3 மடி கணனி (Lap Top)
யாழ். மண்ணில் இச்சலுகை ஜுலை 31 வரை மட்டுமே. முந்துங்கள்
Intel® pentium core i3-350
(213GHZ 1066MHz FSB 3MB L2 cache)
Acer InviLink ™
802.11b+g Wi-Fi CERTIFIED ™ Solution/Bluetooth 2.0 +EDR
Preloded Windows 7 Ulitimate
Intel® GL40 Express Chipset
intel 943GML Intergrated 3D Graphics with up to 224MB of video memory
2GB DDR II RAM
320GB HDD
14.1" WXGA colour TFT LCD
DVD-Super Multi Double Layer Drive (DVD+/-RW)
5 in 1 Card Reader
One Year International Traveler's Warranty
FREE IP 1300 PRINTER
இச் சலுகை ஜுலை 31 வரை
விசேட சலுகை
Rs. 89,900/=
acer Extensa E270
Intel® Dual Core Processor E5200 (2.5GHz)
1GB DDRII DIMM 667 MHz at PC-5300 Expandable to 4 GB
160GB HDD S-ATA, 7200rpm
DVD Super Multi Double Layer
18.5" wide screen LCD Color Monitor
56K Internal Modem
Internal Card Reader
One Year Warranty
விசேட சலுகை
Rs.56,900/=
acer Multimedia Projector X1161
DLP™ Technology
2,500 ANSI Lumens (Standard),
1.7 Billion Colors
3,000 Hours (Standard)
One Year Local warranty
விசேட சலுகை
Rs.125,000 +
Sri : 0777754811
metropolitan
Powered by the best
Dealer Office: NAVAHALA
200 K.K.S. Road
Jaffna
021 2225461/2, 2224530


Dulux
AkzoNobel
கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து, Akzonobel பெயின்ற் வகைகள் (எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ), நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள் மற்றும் எமது நிறுவனத்தால் யாழ்பாணத்தில் தயாரிக்கப்பட்ட தரமான முட்கம்பிகள் என்பன வற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
கஜமுகன் ஹாட்வெயர்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல: 021 222 2833

# தென்கொரிய அணியை வீழ்த்தி உருகுவே அணி காலிறுதிக்கு தகுதி

## சாரஸ் அடித்த இரண்டு கோல்கள் கைகொடுத்தது



(போர்ட்எலிசபெத்)

விறுவிறுப்பாக நடைபெற்ற விலகல் முறையிலான (Knock-out) இரண்டாவது சுற்றுப் போட்டியில் உருகுவே அணி 2-1 என்ற கோல் கணக்கில் தென்கொரிய அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.




தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் விலகல் முறையிலான (Knock-out) ரவுண்ட் ஒப் 16 சுற்று நேற்று ஆரம்பமானது.

இதில் நேற்று போர்ட்எலிசபெத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் உருகுவே-தென்கொரிய அணிகள் மோதின. ஆட்டம் ஆரம்பமானதிலிருந்து இரு அணிவீரர்களும் துடியாக செயற்பட்டனர்.

ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் லூஸ் சாரஸ் முதலாவது கோல் அடித்து அசத்தினார். இதன் மூலம் உருகுவே 1-0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றது.

இதற்கு பதில்கோல் அடிக்க தென்கொரிய வீரர்கள் போராடினர். எனினும் உருகுவேயின் தற்காப்பு பலத்தை உடைப்பது தென்கொரிய வீரர்களுக்கு கடினமாயிற்று.

இதனால் முதல்பாதி முடிவில் உருகுவே அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதி ஆட்ட ஆரம்பமாகிய முதலே தென்கொரிய வீரர்கள் அற்புதமாக ஆடினார்கள்.

ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை தென்கொரிய வீரர் யங் பியோ லீ தவறவிட்டார்.

ஆட்டத்தின் 58ஆவது நிமிடத்தில் தென்கொரிய வீரர் சாங் யங் லீ சிறப்பான கோல் அடித்தார். இதனால் தென்கொரியா ஆட்டத்தை 1-1 என்ற கோல்கணக்கில் சமனிலை செய்தது.



சாரஸ்

இதற்கு பதில்கோல் அடிக்க உருகுவே அணியினர் போராடினர். ஆட்டத்தின் 74 ஆவது நிமிடத்தில் சாரஸுக்கு கிடைத்த வாய்ப்பை தவறவிட்டார். எனினும் ஆட்டத்தின் 79ஆவது நிமிடத்தில் சாரஸ் 2ஆவது கோலினை அடிக்க உருகுவே அணி 2-1 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றது.

அடுத்து 84ஆவது நிமிடத்தில் உருகுவே அணிக்கும் 88ஆவது நிமிடத்தில் தென்கொரிய அணிக்கும் கிடைத்த கோல் அடிக்கும் வாய்ப்புகள் வீணடிக்கப்பட்டது.

ஆட்டத்தின் இறுதியில் உருகுவே அணி 2-1 என்ற கோல் கணக்கில் தென்கொரிய அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

இதன் மூலம் உருகுவே அணி 1979ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்குப்பின் காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

இப் போட்டியில் தோல்வியடைந்த தென்கொரிய அணி இரண்டாவது சுற்றுடன் விடை பெற்றது.

# ஸ்பெயின், சிலி அணிகள் 2ஆவது சுற்றுக்குள் நுழைவு



(பிரிட்டோரியா)

உலகக்கிண்ண தொடரில் கடைசி லீக் போட்டியில் ஸ்பெயின் அணி, சிலியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ரவுண்ட் ஒப் 16 சுற்றுக்கு முன்னேறியது.

இதில் சிலி தோல்வியடைந்த போதிலும், ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வென்று இருந்ததால் அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

உலகக்கிண்ணத் தொடரில் எச் பிரிவு கடைசி லீக் போட்டியில் ஸ்பெயின் அணி, சிலி அணியை வீழ்த்தவேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. போட்டியின் ஆரம்பத்தில் சிலி அணியினர் அடுத்தடுத்து தாக்குதல் தொடுத்தனர். இருப்பினும் ஸ்பெயின் கோல் காப்பாளர் அதை அருமையாக தடுத்துவிட்டார்.

முரட்டு ஆட்டம் ஆடிய சிலியின் பொன் சேவுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. ஏற்கனவே அவர் ஒருமுறை மஞ்சள் அட்டை பெற்றிருந்ததால், அடுத்த போட்டியில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் 24ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் டோரஸ் அடித்த பந்தை கோல் காப்பாளர் காலால் தட்டிவிட்டார். இதை 41 மீற்றர் தொலைவில் இருந்து டேவிட்வில்லா கோல் போஸ்ட்டை நோக்கி அடிக்க சிறப்பான கோலாக மாறியது. அடுத்த சிறிது நேரத்தில் (37ஆவது நிமிடம்) டோரஸ் கொடுத்த பாஸை பெற்ற இனியஸ்டா மற்றொரு கோல் அடித்து ஸ்பெயின் அணிக்கு வலுவான முன்னிலை பெற்று தந்தார்.

இதனிடையே ஸ்பெயின் வீரர் பவுல் செய்த சிலியின் எஸ்ட்ரடாவுக்கு இரண்டாவது முறையாக நடுவர் மஞ்சல் அட்டை கொடுத்தார். இதையடுத்து சிவப்பு அட்டை பெற்று உடனடியாக களத்தில் இருந்து வெளியேறினார். 10 வீரர்களுடன் விளையாடிய சிலி அணி முதல் பாதியில் 0-2 என்ற கோல் கணக்கில் பின் தங்கி இருந்தது.

### சிலி பதிலடி

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் சிலி அணிக்கு மாற்று விரராக களமிறங்கிய மில்லர் ஒரு கோல் அடித்து (47ஆவது நிமிடத்தில்) ஆறுதல் தந்தார். 75 ஆவது நிமிடத்தில் சிலியின் பர்தேஸ் அடித்த பந்து வீணாக அடுத்த நிமிடத்தில் ஸ்பெயினின் பேப்ரிகாஸ் அடித்த வாய்ப்பும் தவறியது. இரு அணியினரும் மேலும் கோல் அடிக்காத நிலையில் ஆட்டநேர இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியை அடுத்து ஸ்பெயின் அணி 6 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடம் பிடித்தது. சிலி தோல்வியடைந்தாலும் ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வென்று இருந்தால் இந்த இரு அணிகளும் ரவுண்ட் ஒப் 16 சுற்றுக்கு முன்னேறின.

# தொடரிலிருந்து வெளியேறியது சுவிட்சர்லாந்து, ஹோண்டுராஸ்



(புளோயம்பான்டைன்)

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் எச் பிரிவு சுவிட்சர்லாந்து அணி, ஹோண்டுராஸை சந்தித்தது. 3 புள்ளிகள் பெற்றுள்ள சுவிட்சர்லாந்து அணி இதில் வெற்றிபெறும் பட்சத்தில் அடுத்த சுற்று வாய்ப்பு கிடைக்கும் என்ற நிலையில் ஆரம்பத்தில் இருந்தே ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இருப்பினும் ஹோண்டுராஸ் அணியினர் தற்காப்பு ஆட்டம் விளையாடியதால் சுவிட்சர்லாந்து வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை. 11, 17, 22 ஆவது நிமிடத்தில் சுவிட்சர்லாந்தின் இன்லர், டெர்டியாக் மற்றும் பர்னெட்டா அடித்த வாய்ப்புக்கள் வீணானது. இதையடுத்து முதல் பாதி 0-0 என்ற கணக்கில் சமனில் இருந்தது.

இரண்டாவது பாதியில் ஹோண்டுராஸின் சுவாஜோ, பிகுயோரவா அடித்த பந்து வலைக்குள் செல்லாமல் தப்பின. தொடர்ந்து இரு அணியினரும் போராடிய போதும் ஒரு கோல் கூட அடிக்காததால் போட்டி 0-0 என்ற கணக்கில் சமனிலையானது. இதையடுத்து இந்த பிரிவில் இருந்து சுவிட்சர்லாந்து (4 புள்ளி), ஹோண்டுராஸ் (ஒரு புள்ளி) அணிகள் வெளியேறின.

சுவிட்சர்லாந்து அணி, ஹோண்டுராஸ் அணிகள் மோதிய லீக் போட்டி சமனிலையில் முடிபடைந்தது. இதனால் இரு அணிகளும் லீக் சுற்றுடன் தொடரிலிருந்து விடை பெற்றன.

ப்மிலி சுப்பர் ஸ்பொட்
சந்தை அருகாமை, மானிப்பாய்
T.P.:- 021 5100169 / 021 7900388
BAHIRA
கோழி இறைச்சி :- 1Kg- 350/=
பன்றி இறைச்சி :- 1Kg- 490/=
பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபாய் 350/= பெறுமதியான கைப்பை இலவசம்.
(C-545)

# யாழ்.போதனா வைத்தியசாலையின் புனரமைப்புக்கான நிதி கையளிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு யப்பான் அரசினால் 2.9 பில்லியன் ரூபாய் நிதி சுகாதார அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யாழ்.போதனா வைத்தியசாலையை நவீன முறையில் புனரமைப்பதற்கு யப்பான் அரசு 2.877 பில்லியன் ரூபாய் நிதியுதவியை வழங்கியுள்ளது.

இத் திட்டத்திற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் யப்பான் சர்வதேச அபிவிருத்தித் திட்ட முகவர் அமைப்பின் (JICA) வைத்தியசாலை அபிவிருத்திப் பணிப்பாளர் சிங்கோ குரோடாவும் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியகலாநிதி ரவீந்திர ரூபேருவும் கையெழுத்திட்டனர்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளதாவது,

இந் நிதியின் மூலம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சினால் யாழ்.போதனா வைத்தியசாலை 21 மாதங்களில் நவீன முறையில் புனரமைப்புச் செய்யப்படும்.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய 4 மாடிக் கட்டடத்தில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, இருதய சிகிச்சைப் பிரிவு உட்பட பல்வேறு பிரிவுகள் அமைக்கப்படும் என சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# யாழின் புனிதத் தன்மையை சீர்குலைக்க வேண்டாம்!

## பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள்

தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து அநாகரிகமாக நடந்து கொள்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவ தெரிவித்தார்.

மது அருந்தி விட்டு அல்லது அதனை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குள் வருவதைத் தென்பகுதி மக்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் நல்லூர்க் கந்தன் ஆலயம், நயினாதீவு நாகவிகாரை ஆகிய வணக்க ஸ்தலங்களுக்கு இவ்வாறு சென்று அவற்றின் புனிதத் தன்மையைச் சீர்குலைக்க வேண்டாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

யாழ்.மக்களின் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முறையான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 269 இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் சேர்க்கப்பட்டு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

18 பொலிஸ் பிரிவுகளில் பாதுகாப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டு அக் குழுக்கள் மற்றும் கிராம சேவையாளர்களின் உதவியுடன் இரவு-பகல் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என அவர் மேலும் கூறினார். (ச-3)

# அனிமேஷன் கருத்தரங்கு

கணணித் துறையில் அனிமேஷன் கற்கை நெறி தொடர்பான கருத்தரங்கு ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி மேல்மாடிக் கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள மக்நெற் சியற் அக்கடமியில் இடம்பெற்று வருகின்றது.

இக்கருத்தரங்கு இந்தியாவில் புகழ்பூத்த பெங்களூர் சியற் அக்கடமியின் சந்தைப் படுத்தல் முகாமையாளர் இராஜேஸ் மற்றும் றூடி அனிமேஷன் விரிவுரையாளர் மோகன் ஆகியோரால் இக்கருத்தரங்கு நடத்தப்படுகின்றது.

இதுதொடர்பான விபரங்களை அறிய விரும்புபவர்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்நெற் சியற் அக்கடமியில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

# புலோலியைச் சேர்ந்த குடும்பஸ்தர் கட்டுநாயக்கவில் வைத்துக் கைது

## உறவினரை அழைத்து வரச் சென்றபோது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வடமராட்சியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலோலி தெற்கு, சாரையடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவரூபன் (வயது-27) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவரது கைது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் சென்னையிலிருந்து திரும்பிய தனது உறவினர்களை அழைத்து வருவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றபோதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஒரு வருட காலமாக இந்தியாவில் வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-24)

# விடுதலைப்புலிகளின் புலனாய்...

அடிப்படையில் தென்னிலங்கையில் பல கைது நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் மாத்தறை மாவட்டத்தில் யாசகர் வடிவிலிருந்த புலிகளின் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடியின் தகவல்படி, விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் புலனாய்வுப் பிரிவின் இயக்கம் குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனடிப்படையிலேயே அண்மையில் மாத்தறைப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 35 வயதுடைய ஈஸ்வரன் சந்திரகுமாரன் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவுப் போராளி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அவர் முல்லைத்தீவில் கடும் யுத்தம் நடைபெற்றபோது அங்கிருந்து தப்பி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# புலிகளின் முன்னாள் போராளி...

போட்டியிடுகின்றார்.

அவர் கடந்த 10 ஆம் திகதி இப் புனர்வாழ்வு முகாமுக்குச் சென்றிருந்தார். அவருடைய அரசியல் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக அமையக் கூடிய சிலரின் உதவியை அங்கு கோரியிருக்கின்றார்.

அவர்களும் குமரன் பத்மநாதனுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளராக ஒரு காலத்தில் இருந்த போஸ் அவரது சகாக்கள் சகிதம் குமரன் பத்மநாதனின் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்க முன்வந்துள்ளார்.

இந் நிலையில் அரசு 50 வயதுக்கு மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 26 பேரை நேற்று விடுவித்தது. 50 வயதுக்கு மேற்பட்டவர் என்கின்ற வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும் அவ் இயக்கத்தின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளரான சு.ப.தமிழ்ச்செல்வனின் சகோதரருமான மூர்த்தியும் விடுதலையாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# எகிப்து துணைத் தூதுவரின்...

வுடன் நெருக்கமாகப் பணியாற்றி வந்ததன் காரணமாகவே அவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் சாட்சியங்களைச் சமர்ப்பிக்கப் புல்னாய்வுப் பிரிவினர் அமல் கருணாசேகரவிடமும் விசாரணை நடத்தியுள்ளனர்.

வெளிநாடுகளில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காகத் துணைத் தூதுவராக நியமிக்கப்பட்ட அவர், அரசியல் காரணமாக மீண்டும் பின்நோக்கித் தள்ளப்பட்டுள்ளார்.

கருணாசேகர உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளில் துணைத்தூதுவர்களாக நியமிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பலனாகவே விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பைச் சேர்ந்த குமரன் பத்மநாதன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ச-5)

# பயங்கரவாதத்திற்கு எதிராக...

உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளினால் பிராந்திய ஒற்றுமை சீர்குலைந்துள்ளதுடன் பொருளாதாரப் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான சார்க் மற்றும் சர்வதேச பிரகடனங்களை முழுமையாக அமுல்படுத்த சகல நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பாக முக்கிய தகவல்களை சார்க் பிராந்திய வலய நாடுகள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். பயங்கரவாதம், சட்டவிரோத ஆள்கடத்தல் போன்றவற்றுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ச-5)

# இலங்கையின் எதிர்காலம்...

அவர் மேலும் கூறியுள்ளதாவது, தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இந்தத் தருணத்தில் அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான உறவினை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே இது தொடர்பில் அமெரிக்கா இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது. தற்போதைய சூழ்நிலை இலங்கைத் தமிழர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான உறவை மேம்படுத்திக் கொள்வதற்கான சிறந்த வாய்ப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையின் எதிர்காலத்திற்கு மனித உரிமைகள் மிகவும் அத்தியாவசியமான விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவே மக்களுடனான புதிய உறவை மேம்படுத்துவதற்கு சிறந்து வாய்ப்பை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஐ.நா.செயலாளரின் நிபுணர் குழுவை இலங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளுக்கான பிரதிநிதி விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

கார் விற்பனைக்கு
ஆங்கில தொடர் இலக்கமுடைய
Nissan Sunny Super Saloon N-16
சில்வர் கலர் கார் உடனடியாக
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 021 222 8984 / 077 3747825
(C-549)

# செயலிழந்துள்ள சுயாதீன...

பிக்கப்படவுள்ளதுடன் தேர்தல் ஆணைக்குழு ஒன்றும் புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ளது.

ஜூலை மாதம் மேற்கொள்ளப்படவுள்ள அரசியல் சாசனத் திருத்தத்தின் பின்னர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இந்த சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

இந்த ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்பட வேண்டிய ஆணையாளர்கள் மற்றும் அரச சேவையின் உயரதிகாரிகளை அரசாங்கம் ஏற்கனவே தேர்ந்தெடுத்துள்ளது.

பொலிஸ் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆகிய இரண்டு ஆணைக்குழுக்களின் தலைவர்களாக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை தற்போதைய தேர்தல் ஆணையாளர் ஓய்வு பெறும் வயதைத் தாண்டி விட்டதால் அவருக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளது.

ஸ்தாபிக்கப்படவுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படவுள்ளதுடன் அவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

அதனைத் தவிர தேர்தல் தொகுதிகளை மாற்றியமைப்பதற்காக தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணைக்குழுவொன்றும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நியமிக்கப்படவுள்ளது. (ச-5)

# அரசியல் சாசனத் திருத்த...

மன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமது கட்சி உட்பட ஆளும் கூட்டணியில் உள்ள 4 இடதுசாரிக் கட்சிகள் இந்த அரசியல் சாசனத் திருத்தத்தை எதிர்க்கின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சரவையில் அரசியல் சாசனத் திருத்தம் பற்றிய குறிப்பு மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. என்னென்ன மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது என்ற விபரங்கள், எப்படி அந்த மாற்றங்கள் செய்யப்படவுள்ளன போன்ற விடயங்கள் அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி ஒருவர் விரும்பிய தடவைகள் அந்தப் பதவியை வகிப்பதற்கு எதிராக இடதுசாரிகள் ஆரம்பித்துள்ள நடவடிக்கைகள் தொடரும் எனவும் வாசுதேவ நாணயக்கார மேலும் கூறியுள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.